ஆசிரியர்கள் தங்கள் சொற், செயல்களில் மாணவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழவேண்டும். அவர்களில் மிளிரும் இறை அச்சம், இக்லாஸ், தூய எண்ணம், நேர்மை, வாய்மை போன்ற நற்பண்புகள் மாணவர்களுக்கு அழகிய வழிகாட்டுதலாக அமையும்.

ஆசிரியர்கள் தங்களது பணியில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை இலட்சியமாகக் கொண்டு பணிபுரிதல் வேண்டும். அவர்களது மாண்புகளும், சிறப்புகளும் மறுமையின் நற்பேறுகளும் அதிகமதிகம் உள்ளன. பயன்தரும் கல்வியின் நன்மைகள் மரணத்திற்கு பின்பும் தொடர்ந்து வந்து சேரும் என அண்ணல் நபி (ஸல்) கூறியுள்ளார்கள். மேலும் அவர்களின் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய தொழுகையில் கடைசியிருப்பில், அத்தஹிய்யாத், ஸலவாத் ஆகியவைகளுக்கு பின்பு, "அல்லாஹும்ம ஃபிர்லி வலிவாலிதய்ய வலிஉஸ்தாதி" எனக்கும் என் பெற்றோருக்கும் என் ஆசிரியருக்கும் பிழை பொறுப்பாயாக! எனக் கூறி அவர்களுக்காக துஆ இறைஞ்சுகின்றனர்.

ஆசிரியர்கள், தங்கள் மாணவர்கள் ஏழ்மையின் காரணமாக படிப்பை துண்டிக்க முயன்றால், தங்களால் இயன்றளவு உதவி அவர்களது கல்வியைத் தொடரத் துணைபுரிவது சிறந்ததொரு பண்பாகும்.

இமாம் அபூயூசுப் (ரஹ்), இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் கற்றுத் தேறிய மாணவர்களில் மிகக் குறிப்பிடத்தக்கவர்களாவர். பிற்காலத்தில் அவர்கள் மாபெரும் சட்ட நிபுணராகவும், இஸ்லாமிய பேரரசின் தலைமை நீதிபதியாகவும் திகழ்ந்தார்கள். மஹ்தி, ஹாதி, ஹாரூன் ரஷீது ஆகிய முப்பெரும் அப்பாஸிய கலீஃபாக்களின் காலத்தில் தொடர்படியாக அப்பதவியை வகித்தார்கள். அவர்கள் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் ஹதீதுக்கலையையும், பிக்ஹுக் கலையையும் கற்று வந்த காலை மிகவும் ஏழ்மை நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் அவர்களுக்கு பொருளுதவி வழங்கி அவர்களின் படிப்பை தொடரச் செய்தார்கள். (முகத்திமத்துல் ஹிதாயா)



திருமதீனாவில் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம், மக்காவின் கவர்னரின் சிபாரிசுக் கடிதத்துடன் வந்து இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தங்களது 13வது வயதில் மாணவராகச் சேர்ந்தார்கள்.

இமாமவர்கள் அவர்களைத் தங்கவைத்து தேவையான உதவிகள் செய்து ஹதீஸ் கலையை கற்றுக் கொடுத்தார்கள்.

வேலூர் அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அரபிக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், மாபெரும் மார்க்க மேதையுமான அல்லாமா அபூபக்கர் ஹஜ்ரத் (ரஹ்) அவர்கள், வசதிக்குறைவான மாணவர்களுக்கு தங்களால் இயன்றளவு பொருளுதவி செய்து வந்தார்கள் என்றும், பிற அன்பர்கள் மூலமாகவும் உதவி கிடைக்கச் செய்தார்கள் என்றும் எம் சங்கைக்குரிய ஆசிரியர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், அவர்களது கல்விக்கேற்ப அவர்கள் நல் அமல்கள் செய்து வருவதற்கும், அவர்களது எதிர்கால நல்வாழ்விற்கும், அவர்களின் காரணமாக சமுதாயத்திற்கு பயன் விளைவதற்கும் வல்ல அல்லாஹ்விடம் துஆ இறைஞ்சி வருதல் சிறந்த பண்பாகும். அதன் மூலம் அவர்களது நற்கூலி மேலும் அதிகமாகும்.

## நண்பர்களின் கடமைகள்

நட்பின் அடிப்படையாக அன்பு விளங்குகிறது. அன்பு செலுத்துவதும், செலுத்தப்படுவதும் நன்னம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: முஃமின் அன்பின் இருப்பிடமாவார். அன்பு

செலுத்தாதவரிலும், பிறரால் அன்பு செலுத்தப்படாத வரிலும் நலவு இருப்பதில்லை. (அஹ்மது, பைஹகீ)

முஃமினின் செயல்பாடுகள், பிறர்மீது அவர் அன்பு செலுத்தும் விதத்திலும், அவர் மீது மற்றவர்கள் அன்பு செலுத்தும் விதத்திலும் அமையப் பெற வேண்டும். அப்பொழுது அவர் பலருக்கு நண்பராகவும், பலர் அவருக்கு நண்பராகவும் திகழுவர்.

நட்பு கொள்ளுமுன் நல்லவரை நண்பராகத் தேர்வு செய்தல் அவசியமாகும். ஏனெனில் நண்பரின் எண்ணங் களால், சிந்தனைகளால், பழக்க வழக்கங்களால், குணங் களால் ஒருவர் கவரப்படுவது இயல்பே.

மனிதன் தன் நண்பனின் மார்க்கத்தை பின்பற்றுபவனாக உள்ளான். ஆகவே அவன் யாரை நண்பனாக ஆக்கிக் கொள்கிறான் என்பதைக் கவனித்துக் கொள்வானாக என மாநபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் கூறியுள்ளார்கள். (திர்மிதி)

இறையச்சம், நீதி, நேர்மை, வாய்மை, விரிந்த உள்ளம், இரக்கம் போன்ற நற்பண்புகள் நிரம்பிய நல்லொழுக்கமிக்க வர் நண்பராக அமையப் பெறின் அது அவருக்கு நற்பயன் களை வாரி வழங்கும். அவரது வாழ்வில் ஒளிவீசச் செய்யும்.

மரணமடைந்துவிட்ட ஒரு முஃமினான அடியாரின் புதல்வருக்கு "நீர் உம் பெற்றோரின் நண்பருக்கு சங்கை செய்வீராக; அது உம் பெற்றோருக்கு மரணத்தின் பின், செய்யும் நன்மைகளைச் சேர்ந்ததாகும் எனக் கூறி, ஒரு தலைமுறையில் தோன்றிய நட்பின் தொடர்புகள், அடுத்த தலைமுறையிலும் நீடிக்க வேண்டுமென இஸ்லாம் விரும்பு கிறது. ஆகவே, தமக்குப் பின் தம் சந்ததியினரும் கண்ணியப் படுத்தி வரத்தக்க வகையில் நல்ல நட்பாக நல்ல நண்பர் களாகத் தேடிக்கொள்வது அவசியமாகும்.

தீயவரின் நட்பு பெரும்பாலும் தீமை விளைவித்து



விடுகிறது. தீமை விரைவாகப் பரவும் இயல்பு கொண்டது. மேலும் தீமையின் வழியாக உருவாகும் நட்பு நிலைத்து நிற்பதில்லை.

நல்ல தோழமையின் உதாரணம், கஸ்தூரி வைத்திருப் பவர் போன்றாகும். ஒருவேளை அதில் சிலதை அவர் உமக்கு தரலாம். அல்லது நீர் அவரிடம் விலைக்கு வாங்க லாம். அல்லது (குறைந்த பட்சம்) அவரது கஸ்தூரியின் நறுமணத்தையாவது நீர் நுகரலாம். தீய தோழமையின் உதாரணமோ நெருப்பு உலை எரித்துக் கொண்டிருப்பவர் போன்றாகும். நீ அதன் அருகில் சென்றால் அது உமது ஆடைகளை கரித்துவிடும், நீ (சற்று) தூரத்தில் நின்றாலும் நீ வெறுக்கும் அதன் (புகையின்) வாடையை பெற்றுக் கொள்வாய் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

நல்ல நட்பு நம் வாழ்வின் நற்பேறுகளில் ஒன்றாக திகழ்வதால் அதனைப் பேணிப் பாதுகாத்து வரவேண்டும். நண்பரை உளமாற நேசித்து, அவருக்கு நன்மையை நாடி வரவேண்டும். "உங்களில் யார் தமக்கு விரும்புவதை தம் சகோதரருக்கு விரும்பவில்லையோ, அவர் உண்மை முஃமினாக ஆகமாட்டார்" என மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

நண்பருக்கு தம்மால் இயன்ற உதவிகளை சொல்லால், செயலால், பொருளால் செய்து நட்பிலக்கணம் காத்துவர வேண்டும். அவரது இன்ப, துன்பங்களில் பங்கெடுத்து ஒத்துழைப்பு நல்கி வரவேண்டும்.

Prosperity Finds Friends; Adversity tries them-

செழி செழிப்பு நண்பர்களை கண்டுபிடிக்கிறது. கஷ்ட காலம் நண்பர்களை பரிசோதிக்கிறது என ஓர் ஆங்கில பழமொழி கூறுகிறது.

சீர்மிகு நட்பிற்கு சிறந்த உதாரணமாக அபூபக்கர் (ரலி)

விளங்குகிறார்கள். 40வது வயதில் தங்களுக்கு நபிப்பட்டம் வழங்கப்பட்டிருப்பதை நபி (ஸல்) அவர்கள் தங்களது நண்பரான அபூபக்கர் (ரலி) அவர்களிடம் அறிவித்த பொழுது, உடனே எவ்வித பின்விளைவுகளையும் சிந்திக் காமல் தங்கள் நம்பிக்கைக்குரிய நண்பரின் சொல்லை ஏற்று அவர்களை அல்லாஹ்வின் திருத்தூதர் என ஈமான் கொண்டார்கள்.

பின்னர், அவ்வுத்தம நண்பர் காட்டிய திருப்பாதையில் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்தார்கள். மிகவும் இக்கட்டான கட்டத்தில் நபியவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணத்தின்பொழுது அவர்களே அவர்களின் பயணத் தோழராகத் திகழ்ந்தார்கள்.

நண்பர்களைக் கண்ணியப்படுத்தி, அவர்களிடம் மகிழ்ச்சி, பரிவு, நல்லியல்புகள் ஆகியவற்றுடன் பழகி வரவேண்டும். அவர்களது இரகசியங்களை பாதுகாத்து வரவேண்டும். அவர்களது குறைகளை பகிரங்கப்படுத்தாமல் தனிமையில் எடுத்துக்கூறி திருத்தி வரவேண்டும்.

ஒருவருக்கொருவர் அன்பளிப்பு வழங்கிக் கொள்வது, அன்பை அதிகரித்து நட்பிற்கு வலிமை சேர்க்கும். "நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்பு வழங்கிக் கொள்ளுங்கள். (அப்பொழுது) நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்ப வர்களாக திகழ்வீர்கள்" என நபியவர்கள் ஒரு மணி மொழியில் கூறியுள்ளார்கள். (அபூயஃலா)

மற்றொரு மணிமொழியில் "அன்பளிப்பை நீங்கள் மறுக் காதீர்கள்" என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (அஹமது)

ஒருவர் தம் முஃமினான சகோதரரை நேசித்தால், அதனை அவருக்கு அவர் அறிவித்து விடட்டும் என மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அபூதாவூது)

நண்பருக்கு நன்மைகளை நன்முறையில் போதித்தும் இயன்ற அளவு தீமைகளைவிட்டு விலக்கியும் நல்லுபதேசம் செய்துவர வேண்டும்.



முஆது (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள், என் கரத்தைப் பிடித்துச் சொன்னார்கள். முஆதே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மை நேசிக்கிறேன். பின்னர் நான் உமக்கு உபதேசம் செய்கிறேன். முஆதே! ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும்,

*"அல்லாஹும்ம அஇன்னீ அலாதிக்ரிக, வஷுக்ரிக வ ஹுஸ்னி இபாததிக"*

இறைவா! உன்னை நினைவு கூறுவதின் மீதும் உனக்கு நன்றி செலுத்துவதின் மீதும், உனக்கு அழகிய வணக்கம் புரிவதின் மீதும் எமக்கு உதவி செய்வாயாக என நீர் கூறுவதை விட்டுவிடவேண்டாம். (அபூதாவூது, நஸயீ)

(நல்லொழுக்க மிக்க) தோழர்களிடம் நல்லவராகத் திகழுபவர், அல்லாஹ்விடமும் நல்லவராகத் திகழுவார் என நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள். (திர்மிதி)

மேலும் நம் பெற்றோரின் நண்பர்களையும் நாம் கண்ணியப்படுத்தி வரவேண்டுமெனக் கூறி இஸ்லாம் அவர்களையும் சிறப்பிக்கிறது. பெற்றோரின் மரணத்திற்கு பின் அவர்களின் நண்பர்களை சேர்த்துக் கொள்வது மிகப் பெரும் நன்மைகளில் நின்றுமுள்ளதாகும் என நபியவர்கள் நவின்றதாக இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்)

நல்ல நண்பர்களைப் பெற்று, அவர்களது நட்பைப் பேணி வாழ அல்லாஹ் அருள்புரிவானாக!

## முதலாளி – தொழிலாளி கடமைகள்

முதலாளி, முதலாளி என்ற நிலையிலும், தொழிலாளி, தொழிலாளி என்ற நிலையிலும் சில கடமைகளைப் பேணிவர இஸ்லாம் கட்டளையிடுகிறது.

தொழிலாளியின் கூலியைக் கொடுப்பதில் தாமதம் செய்தல் கூடாது.

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள். தொழிலாளிக்கு அவரது வியர்வை உலரு முன் கூலியை கொடுத்து விடுவீர்களாக. (இப்னுமாஜா)

ஓர் ஊழியரை நியமனம் செய்தால் அவரது ஊதியத்தை முன்னதாகவே நிர்ணயம் செய்தல் முறையாகும்.

ஒருவர் ஓர் ஊழியரை வேலைக்கு அமர்த்தினால் அவருக்கு அவரது ஊழியத்தை (முன்னதாக) அறிவித்துக் கொடுப்பாராக! என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அறிவிப்பாளர்: முஹம்மது பின் ஹஸன் - கிதாபுல் ஆதார்)

தம் ஊழியரிடம் தவறு ஏதும் நிகழ்ந்துவிடின், அதனை மன்னித்து விடுவது சிறந்த பண்பாகும் என பின்வரும் நபிமொழி எடுத்துரைக்கிறது.

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களின் சமுகம் ஒரு மனிதர் வந்து அல்லாஹ் வின் திருத்தூதரே! ஓர் ஊழியரை எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என வினவினார். அதற்கவர்கள் அமைதியாக இருந்தார்கள். அவர் மீண்டும் வினவினார். அப்பொழுதும் அமைதியாக இருந்தார்கள். பின்னர் மூன்றாம் முறையாக அவர் வினவியபொழுது ஒவ்வொரு நாளும் எழுபது முறை ஊழியரை மன்னிப்பீராக! எனப் பகர்ந்தார்கள். (அபூதாவூது) இங்கு எழுபது முறை என்ற கருத்து, பன்முறை என்பதாகும். (லம்ஆத்)

ஒரு பணிக்காக ஊழியரை நியமனம் செய்யும்பொழுது அப்பணியைத் திறம்பட நிறைவேற்றும் ஆற்றலும், நம்பிக்கைத் தன்மையும் அவரிடம் உள்ளதா? என்பதைக் கவனித்து நியமனம் செய்ய வேண்டும். இவ்விரு பண்புகளும் கொண்டவர் சிறந்த ஊழியர் என திருக்குர்ஆன் சமிக்ஞை செய்கிறது.

நபி ஷுஐப் (அலை) அவர்களின் புதல்வி ஸபூரா அவர்கள், நபி மூஸா (அலை) பற்றி தமது தந்தை ஷுஐப்



(அலை) அவர்களிடம் கூறும்பொழுது,

இன்ன கைர மனிஸ்தஃஜர்தல் கவிய்யுல் அமீன்

நீங்கள் யாரை கூலிக்காக அமர்த்தினீர்களோ, அவர் திறனும், நம்பிக்கையும் வாய்ந்தவர் எனக் கூறினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தமக்கு இடப்பட்ட பணியை மனமாற நிறைவேற்றும் நம்பிக்கையான பொறுப் பாளர், தர்மம் வழங்குவோரில் ஒருவராவார்" எனப் பகர்ந்துள்ளார்கள்.

(அறிவிப்பாளர்: அபூமூஸா அல்அஷ்அரி (ரலி) புகாரி)

தம் ஊழியரின் ஊதியத்தை நிறைவாகக் கொடுத்துவிடும் எஜமானர் மீது அவரது சோதனையான கட்டங்களில் அல்லாஹ் இரக்கம் காட்டுகிறான்.

நபியவர்களுக்கு முன் வாழ்ந்த மூவர், ஒரு மலைக் குகையில் ஒதுங்கியபொழுது அதனை ஒரு பெரும் பாறாங் கல் மூடிக்கொண்டது. அதனால் அவர்கள் வெளியே வர இயலாது போகவே, மூவரும் தங்களது வாழ்வில் தாங்கள் செய்த நன்மைகளில் தலையானதைக் கூறி அதன் பொருட் டால் அக்கல், குகைவாயிலைவிட்டு அகல வேண்டுமென அல்லாஹ்விடம் பிரார்த்தித்தனர். அல்லாஹ் அவர்களது பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு அக்கல்லை குகையை விட்டு அகலச் செய்தான்.

அம்மூவரில் ஒருவர் கூறினார். நான் பல ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தேன். அனைவருக்கும் உரிய ஊதியங்களை வழங்கிவிட்டேன். ஒருவர் மட்டும் அதனை வாங்காமல் சென்றுவிட்டார். நான் அதனை முதலீடு செய்து பன்மடங்காகப் பெருக்கி, பின்னர் அவர் ஒருமுறை என்னிடம் வந்தபொழுது அவரிடம் வழங்கினேன். அவர் அச்செல்வங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்.

இந்நிகழ்ச்சி விரிவாக புகாரி ஷரீபில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

ஒருவர் ஓர் ஊழியரை பணியில் அமர்த்தினால், அவர் அப்பணியைச் செய்யும்பொழுது அவரது பணியில் அவருக்கு துணைபுரிவதும், அவர் அறியாத நுட்பங்களை அவருக்கு சொல்லித்தருவதும் அழகிய பண்பாகும்.

நபியவர்கள் ஒரு மணிமொழியில், வேலை செய்பவருக்கு நீ உதவுவதும், அல்லது வேலையை நன்றாக செய்யத் தெரியாதவருக்கு, அதனைச் செய்து கொடுப்பதும் சதகா எனும் தர்மமாகும் எனப் பகர்ந்துள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

தம் ஊழியர்களுடன் மனிதாபிமான முறையில் இரக்க சிந்தனையுடன் நடந்து கொள்வதும், அவர்களது உணர்வு களை புரிந்து நடந்து கொள்வதும், சிறந்த எஜமானரின் பண்பாகும்.

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள். உங்களில் ஒருவருக்கு அவரது ஊழியர் உணவைத் தயார் செய்து, பின்னர் அதனை அவரிடம் கொண்டு வந்தால் அவர் அவ்வுணவின் உஷ்ணத்திற்கும் புகைக்கும் பொறுப்பேற்றுக் கொண்டவர் (ஆகவே) அவரை அவருடன் (உணவு உண்ணுவதற்கு) அமர்த்திக் கொள்ள வும்! அவரும் சாப்பிடவும். உணவு குறைவாக இருந்தால், அவ்வுணவிலிருந்து அவருக்கு ஒரு கவளமோ அல்லது இரண்டு கவளமோ கொடுத்துவிடவும். (முஸ்லிம்)

எஜமானர்கள் தங்கள் ஊழியர்களின் உரிமைகளை வழங்கி அவர்களுடன் நன்முறையில் நடந்து வரவேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். அப் பொறுப்பை (நிர்வகித்ததைப்) பற்றி நீங்கள் ஒவ்வொரு வரும் (அல்லாஹுதஆலாவின் சமுகத்தில்) வினவப்படுவீர் கள் என அண்ணல் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

ஒருவர் தம் ஊழியர்களின் உணவுப் பொறுப்பை ஏற்றிருந்தால் அவர்களுக்கு தடையின்றி உணவு வழங்கி வர



வேண்டும். ஒருவர் தாம் யாருக்கு உணவு வழங்க வேண் டுமோ அவர்களை விட்டு உணவைத் தடுத்துக் கொள்வது (அவருக்கு) பாவத்தால் போதுமானது என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம்)

தம் குடும்பத்தாருக்கும் தம் ஊழியருக்கும் உணவு வழங்கி வருவதற்கு அல்லாஹ் அவருக்கு சதகாவின் நன்மையை வழங்குகிறான்.

நபியவர்கள் நவின்றதாக மிக்தாம் (ரலி) அறிவிக்கிறார் கள்: நீர் உமக்கு எவ்வுணவை உணவளித்துக் கொள்கிறீரோ அது சதகாவாகும். உம் குழந்தைக்கும், உம் மனைவிக்கும், உம் ஊழியருக்கும் எவ்வுணவை உணவளிக்கிறீரோ அதுவும் சதகாவாகும். (அதற்கும் சதகாவின் நன்மை உண்டு.)

(அதபுல் முப்ரது, நஸயீ அஹ்மது)

இனி தொழிலாளர்கள், தங்கள் முதலாளிகளுடன் நம்பிக்கை, நாணயம், நேர்மை ஆகியவைகளைக் கடை பிடித்து வரவேண்டும். அவை முஃமினின் பண்பாகும். அதன் காரணமாக அல்லாஹ் அவரது வாழ்வைச் சிறப்பாக்கி நற்கூலிகளை அருளுவான்.

தொழிலாளர்கள் தாங்கள் ஏற்கும் பணியை திறம்பட செவ்வனே செய்து வரவேண்டும். நபியவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நீங்கள் ஒரு வேலையைச் செய்தால் அதனை உறுதிபடச் செய்வதை அல்லாஹ் நேசிக்கிறான். (அபூநுஅய்ம்) மற்றொரு மணி மொழியில் நீங்கள் ஒரு வேலையைச் செய்தால் அதனை அழகுபடச் செய்வதை அல்லாஹ் உவக்கிறான் என மாநபி (ஸல்) பகர்ந்துள்ளார்கள். (பைஹகீ)

முதலாளியின் சொத்துக்களையும், பொருட்களையும், தங்கள் சொந்த சொத்துக்களையும், பொருட்களையும் போன்று பேணி பாதுகாத்து வரவேண்டும். 'ஊழியர், அவரது எஜமானரின் பொருளிற்கு பொறுப்பாளராவார்

அவர் அப்பொறுப்பை (நிர்வகித்ததைப்) பற்றி (அல்லாஹ்" தஆலாவின் சமுகத்தில்) கேட்கப்படுவார் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

(பைஹகீ)

தம் எஜமானருடன் பிரச்சினைகள் ஏதும் தோன்றின் அவைகளை சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்வது சிரிய நற்பண்பாகும். "சமாதானமே சிறந்தது" என அல்லாஹ் தன் அருள்மறையில் கூறுகிறான்.

உழைக்கும் மனிதரை அல்லாஹ் நேசிக்கிறான் என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (அஹ்மது)

நலம் நாடும் ஓர் உழைப்பாளியின் இரு கரங்களின் சம்பாத்தியம், சம்பாத்தியங்களில் சிறந்தது என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (அஹ்மது)

ஆகுமான ரிஜ்கைத் தேடிக் களைப்புற்றவனாக தன் அடியானைப் பார்க்க அல்லாஹ் பிரியப்படுகிறான் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (தைலமி)

நபி தாவூது (அலை) அவர்கள் கைத்தொழில் புரிபவராக இருந்தார்கள். நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் மர வேலைப்பாட்டு தொழில் செய்பவராக இருந்தார்கள்.

பொதுவாக நபிமார்கள் அனைவரும் ஆடு மேய்க்கும் பணியை மேற்கொண்டுள்ளார்கள்.

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: எந்த ஒரு நபியும் ஆடு மேய்த்திருந்தே தவிர அல்லாஹ் அவர்களை அனுப்ப வில்லை என நபியவர்கள் கூறினார்கள். அதற்குத் தோழர் கள் தாங்களுமா (ஆடு மேய்த்துள்ளீர்கள்) என வினவினார் கள். அதற்கு நபியவர்கள் (ஆம்) மக்காவாசிகள் சிலரின் ஆடு களை சில 'கீராத்' நாணயங்கள் கூலியின் பேரில் நான் மேய்த்துள்ளேன் எனப் பகர்ந்தார்கள். (புகாரி)

நாயகத்தோழர்களில் சிலர் தர்மம் செய்வதின் சிறப்பு களை நபியவர்கள் கூறக் கேட்டவுடன், தங்களிடம்



பொருள் இல்லாவிட்டாலும், அதன் மாண்பை அடைய வேண்டுமென்பதற்காக மூட்டை சுமக்கும் கூலி வேலையைச் செய்துள்ளனர்.

அபூமஸ்வூதுல் அன்ஸாரி (ரலி) அறிவிக்கிறார்கள்: தர்மம் செய்வதைப் பற்றி நபியவர்கள் எங்களுக்கு ஏவினால், எங்களிலொருவர் கடை வீதிக்குச்சென்று மூட்டைகள் தூக்குவர். (உணவுப்பொருள்களினின்றும்) ஒரு முத்து (இரு கரங்கள் நிரம்பிய) அளவை கூலியாகப் பெறுவர். (பின்னர் அதிலிருந்து ஒரு பகுதியைத் தர்மம் செய்வார்) அபூ மஸ்வூதுல் அன்ஸாரி (ரலி) மேலும் கூறுகிறார்கள்: இன்று அவர்களில் ஒருவருக்கு ஒரு லட்சம் (திர்ஹம்கள்) உள்ளது. (புகாரி)

## விற்பவர்-வாங்குபவர் பொறுப்புகள்

வியாபாரம் குறித்து அல்லாஹ் தன் அருள்மறையில் கூறும்பொழுது, "வியாபாரத்தை அல்லாஹ் ஆகுமாக்கி வைத்துள்ளான்" எனக் கூறுகிறான்.

மப்ரூரான (நன்மையான) வியாபாரமும், கைத்தொழிலும் சம்பாத்தியங்களில் மேலானவையாகும் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (பஜ்ஜார், அஹ்மது)

நம்பிக்கையாளரும், உண்மையாளருமான வியாபாரி கியாமத் நாளில் நபிமார்களுடனும், உண்மையாளர் களுடனும், வீரத் தியாகிகளுடனும் இருப்பார் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (திர்மிதி, இப்னுமாஜா)

விற்பவரும், வாங்குபவரும் உண்மை கூறினால், (வியா பாரத்தின் தன்மைகளை) இருவரும் தெளிவுபடுத்தினால் இருவருக்கும் அவர்களது வியாபாரத்தில் பரகத்-அபிவிருத்தி அருளப்படும். இருவரும் பொய் கூறினால், (வியாபாரத்தின் தன்மைகளை) மறைத்தால் அவ்விருவரது வியாபாரத்திலும் பரக்கத்தை (அபிவிருத்தியை) நீக்கப்படும். (புகாரி, முஸ்லிம்)

வியாபாரத்தில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் நிறுத்தல், அளத்தல் ஆகியவைகளில் குறைவு செய்யாமல் நிறைவாக அளிக்க வேண்டுமென அல்லாஹ் கட்டளை யிட்டுள்ளான். 'அளவையும், நிறுவையையும் பரிபூரண மாக்குங்கள்! மக்களுக்கு அவர்களது பொருள்களில் குறைவு செய்யாதீர்கள்! என திருக்குர்ஆனின் ஸூரத்துல் ஹூத் அத்தியாயத்தில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

நிறுக்கும்பொழுதும், அளக்கும்பொழுதும் வாங்குபவர் பக்கம் சிறிது கூடுதல் இருக்கும் விதத்தில் பொருளில் அதிகரிப்பு செய்து தரவேண்டுமென அண்ணல் நபியவர்கள் பின்வரும் மணிமொழியில் வழிகாட்டுகிறார்கள்.

சுவைது பின் கைஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: நானும், மக்ரபத்துல் அப்திய்யி என்பவரும் ஹஜர் என்னும் ஊரிலி ருந்து துணிகள் வாங்கிக் கொண்டு மக்கா வந்து சேர்ந்தோம். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நடந்தவர்களாக எங்களிடம் வந்தார்கள். சில கால் சட்டை களை எங்களிடம் விலை பேசினார்கள். அவைகளை அவர் களுக்கு விற்றோம். அப்பொழுது (அருகே) ஒருவர் கூலி யின் பேரில் (உணவுப் பண்டங்களை) எடை போட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர் கள் அவரைப் பார்த்து, "நிறுப்பீராக! கொஞ்சம் கூடுதலாக நிறுப்பீராக!" எனப் பகர்ந்தார்கள். (அபூதாவூது)

வியாபாரம் செய்யும்பொழுது மென்மையாக நடந்து கொள்வது இறையருள்களைப் பெருகச் செய்கிறது.

நபியவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள்: விற்கும் பொழுதும், வாங்கும் பொழுதும் கடனைத் திரும்பக் கேட்கும்பொழுதும் மென்மையாக நடந்து கொள் பவர் மீது அல்லாஹ் அருள்புரிவானாக! (புகாரி)

வியாபாரத்தில் அடிக்கடி சத்தியம் செய்வது வெறுக்கத் தக்க விஷயமாகும். அதன் மூலம் சரக்கு விற்பனையாக



வாய்ப்புள்ள போதிலும் அதில் அபிவிருத்தி இராது. மேலும் அது சத்தியத்தின் அந்தஸ்தை குறைத்துவிடும்.

நபியவர்கள் நவின்றதாக கதாதா (ரலி) அறிவிக்கிறார்கள்: வியாபாரத்தில் அதிகம் சத்தியம் செய்வதை நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். அது (சரக்கை) செல்லு படியாக்கும். பரக்கத்தை (அபிவிருத்தியை) குறைத்துவிடும். (அபூதாவூது)

வியாபாரத்தில் ஏமாற்றுதல், மோசடி செய்தல், பொய் கூறுதல் ஆகியவை இழி செயல்களாகும். அவை அல்லாஹ்வின் கோபத்தையும், மக்களின் வெறுப்பையும் சம்பாதித்துத் தரும்.

அபூஹுரைரா (ரலி) கூறுகிறார்கள்: நபியவர்கள் ஓர் உணவுக்குவியலின் அருகே நடந்து சென்றார்கள். அப் பொழுது அக்குவியலுக்குள் தங்கள் கரத்தை விட்டார்கள். அதில் ஈரம் பட்டது. இது என்ன என வியாபாரியிடம் வினவினார்கள். அதற்கவர், மழைத்தண்ணீர் அதில் விழுந்து விட்டது எனக் கூறினார். "அப்படியானால் அதனை மக்கள் பார்க்கும் வகையில் மேலே வைக்கக்கூடாதா! நம்மை ஏமாற்றுகிறவர் நம்மைச் சார்ந்தவரல்ல" என நபியவர்கள் பகர்ந்தார்கள். (முஸ்லிம்)

வியாபாரம், கூட்டு வியாபாரமாக இருந்தால் ஒரு கூட்டாளி, மற்றொரு கூட்டாளியை மோசடி செய்தல் கூடாது. அவ்வாறு செய்வாராயின் அவர் அல்லாஹ்வின் உதவியை இழப்பார்.

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: அல்லாஹ் கூறுகிறான்: இரு கூட்டாளிகள் ஒருவரையொருவர் மோசடி செய்யாதவரை நான் அவர் களுடன் மூன்றாமவனாக இருந்து (உதவி) வருவேன் அவ்விருவரில் ஒருவரை மோசடி செய்து விட்டால் நான் அவர்களை விட்டு விலகிவிடுவேன். (அபூதாவூது)

ஒரு பொருளை நிர்ப்பந்தப்படுத்தி வாங்குவதோ விற்பதோ சரியன்று. அலி (ரலி) கூறுகிறார்கள்: நிர்ப்பந்தப்படுத்தப்பட்டவரின் வியாபாரத்தையும், ஏமாற்று வியாபாரத்தையும் (பழம்) உண்ணப்படும் பருவத்தை அடைவதற்கு முன் விற்கப்படுவதையும் நபியவர்கள் தடுத்துள்ளார்கள். **(அபூதாவூது)**

வியாபாரப் பொருள்களில் ஏதேனுமொன்றை நீக்கி விற்பதாயிருந்தால், முன்கூட்டியே அதனைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும். ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள்: வியாபாரப் பொருள்களிலிருந்து நீக்கப்படுபவை (வாங்குபவரால்) அறியப்பட்டிருந்தாலே தவிர (சிலதை நீக்குவதை) நபியவர்கள் விளக்கியுள்ளார்கள். **(திர்மிதி)**

சரக்குகளை பதுக்கி வைத்தல் இறைவனின் கோபத்திற்குரியதாகும். நபியவர்கள் நவின்றதாக உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: சரக்குகளை கொண்டு வந்து விற்பனை செய்பவர் அல்லாஹ்வால் ரிஜ்கு (இரணம்) அளிக்கப்படுபவராவார். பதுக்கல் செய்பவர் அவனால் சபிக்கப்பட்டவராவார். **(இப்னுமாஜா, தாரமி)**

ஒருவர் ஒரு பொருளை விலைபேசி முடித்து உறுதி செய்தபின் மற்றொருவர் சென்று அதனை விலை பேசுவது சரியன்று. தமது சகோதரரின் வியாபாரத்தின் மீது (அது பேசி முடிக்கப்பட்டுவிட்ட நிலையில்) ஒருவர் வியாபாரம் கேட்கமாட்டார் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். **(முஸ்லிம்)**

ஒரு பொருளை வாங்குபவர் சிந்தித்து அல்லது ஆலோசித்து தமது வாங்குதலை உறுதிப்படுத்திக் கொள்ள அவகாசம் கோரினால் அவருக்கு மூன்று தினங்கள் அவகாசம் அளிக்கப்படும். அம்மூன்று தினங்களுக்குள் அவர் அவ்வியாபாரத்தை உறுதிப்படுத்தவோ அல்லது ரத்து செய்யவோ வேண்டும். இச்சலுகை விற்பனை செய்பவருக்கும் உண்டு. இதற்கு 'கியாருஷ் ஷர்த்து' எனப்படும்.



அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹப்பான் பின் முன்கித் (ரலி) வியாபாரங்களில் ஏமாந்து விடுபவராக இருந்தார். அதனால் நபியவர்கள் அவருக்கு கூறினார்கள்: "நீர் வியாபாரம் செய்தால் மோசடி கிடையாது எனக்கு மூன்று தினங்கள் (வியாபாரத்தை உறுதிப்படுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ) இஷ்டம் உள்ளது" எனக் கூறுவீராக. **(ஹிதாயத்-ஹாகிம் பில் முஸ்தத்ரக்)**

குறையுள்ள பொருளை அதன் விபரம் கூறி விற்பது அவசியமாகும். வாதிலா பின் அஸ்கவு (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் கூறக் கேட்டேன். "ஒருவர் குறையுள்ள பொருளை (வேண்டுமென்றே) அக்குறையை எடுத்துக் கூறாமல் விற்றுவிட்டால், அவர் தொடர்ந்து அல்லாஹ்வின் கோபத்தில் ஆகிவிடுவார். மலக்குகள் தொடர்ந்து அவரை சபிப்பார்கள். **(இப்னுமாஜா)**

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்து விற்பதை அண்ணல் நபி (ஸல்) விலக்கியுள்ளார்கள். "வியாபாரத்திற்காக பாலில் தண்ணீரை கலப்படம் செய்யாதீர்கள்" என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். **(மின்ஹாஜுஸ் ஸாலிஹுன்)**

வியாபாரம் முழுமையாக முடிந்தபின், வாங்கியவர் ஏதாவது ஒரு நிர்ப்பந்த சூழ்நிலையால், தம் வியாபாரத்தை இரத்துச் செய்து கிரயத்தைத் திரும்பக் கேட்பாரானால், அவர் மீது இரக்கப்பட்டு, அப்பொருளை திரும்பப் பெற்றுக் கொண்டு கிரயத்தை திருப்பிக் கொடுப்பது சீரிய பண்புகளில் ஒன்றாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: யார் ஒரு கைசேதப்படும் மனிதருக்கு அவரது வியாபாரத்தைப் போக்கி ரத்துச் செய்து, கிரயத்தை திருப்பிக்கொடுத்து விடுகிறாரோ, அவருக்கு அவரின் தவறுகளை அல்லாஹ் போக்கி வைப்பான். (மன்னிப்பான்) **(பைஹகீ)**

வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் பாங்குக்குப் பின் வியாபாரம் செய்வது விலக்கப்பட்டதாகும். எனினும் அப்பொழுது நடைபெற்ற வியாபாரம் செல்லுபடியாகிவிடும். அல்லாஹ் தன் அருள்மறையில் 'ஜும்ஆ' அத்தியாயத்தில் 'முஃமின்களே! ஜும்ஆ அன்று தொழுகைக்காக அழைக்கப்பட்டால், அல்லாஹ்வின் வணக்கத்தின்பால் விரைந்து செல்லுங்கள் வியாபாரம் செய்வதைவிட்டு விடுங்கள்" எனக் கூறுகிறான்.

பொதுவாக வியாபாரம், கொடுக்கல் வாங்கல்களில் யாருடைய உரிமைகளையும் பறித்துக்கொள்ளாமலும், யாருடைய உரிமைகளிலும் முறையின்றி தலையிடாமலும் பேணுதலாக இருப்பது அவசியமாகும்.

அனஸ் (ரலி) கூறுகிறார்கள்: நபியவர்களின் காலத்தில் ஒருமுறை விலைவாசி ஏறிவிட்டது. ஆகவே தோழர்கள் நபியவர்களிடம் பண்டங்களின் விலையை நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற்கு நபியவர்கள், "அல்லாஹ்வே விலையை நிர்ணயிப்பவன், சுருக்குபவனும், விஸ்தரிப்பவனும், ரிஜ்கு வழங்குபவனும் அவனேயாவான். உங்களில் எவரும் பொருள் மற்றும் இரத்த சம்பந்தமான அநீதத்தை என்னிடம் தேடாதவராயிருக்கும் நிலையில் நான் எனது இரட்சகனை சந்திக்க ஆசைப்படுகிறேன்.

(திர்மிதி, அபூதாவூது, இப்னுமாஜா)

பொருள்கள் வரத்து அதிகமாகிவிட்டால் விலை தானாக குறைகிறது. வரத்து குறைந்தால் விலை உயர்கிறது. இவ்வாறு பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதும், குறைவாக உற்பத்தி செய்வதும் அல்லாஹ்தான். ஆகவே விலைகளை பொதுவாக அவனுடைய இயல்பில் விட்டுவிடுவதே நன்று.

எனினும் விலைகள் (முறையின்றி ஏறி அதனால்) பொது மக்களுக்கு இடையூறை தடுக்க வேண்டிய நிர்ப்பந்தக் கட்டம் ஏற்படுமானால், அதுபொழுது அரசு பண்டங்களின் விலைகளை நிர்ணயம் செய்யலாம். (ஹிதாயா)



## கடன் கொடுப்போர்–வாங்குவோர் கடமைகள்

கடன் வாங்கும் நிலை உலகில் பரவலாகக் காணப்படுகிறது. தனி மனிதர்கள் முதல், நாடுகள் வரை அது நடைமுறையில் உள்ளது. வாழ்வின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக விளங்கும் கடன் விஷயத்தில் இஸ்லாம் அழகிய வழிகாட்டுதலை வழங்குகிறது.

கடன் வாங்கியவர் அதனைத் திருப்பிக் கொடுப்பதில் அக்கறையும், சிரமத்தையும் எடுத்துக்கொள்வது அவசியமாகும். அது கடன் வழங்கி உபகாரம் செய்த மனிதனின் உள்ளத்தைக் குளிரச் செய்து, அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுத்தரும்.

கடன் வாங்கி அதனைத் திருப்பிச் செலுத்துமுன் ஒருவர் மரணித்துவிட்டால் அவர் தம் கடனை திருப்பிச் செலுத்தப்படுமளவு பொருள்களை விட்டுச்சென்றால் பரவாயில்லை. அவ்விதமில்லையெனில் அவர் அல்லாஹ்விடம் பாவியாகி விடுகிறார்.

நபியவர்கள் நவின்றதாக அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் விலக்கியுள்ள பெரும் பாவங்களுக்குப் பின், அடியான் எப்பாவங்களுடன் அல்லாஹ்வைச் சந்திப்பானோ அவைகளில் மிகப் பெரியது, தம் கடனை நிறைவேற்றுபவைகளை விட்டுச் செல்வதன்றி கடனாளியாக மரணித்துவிட்டாரே அவராவார் (அவரது பாவமாகும்) (அபூதாவூது)

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் பாதையில் தம் இன்னுயிரை வழங்கிய வீரத்தியாகிக்கு எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும்; கடனைத் தவிர. (முஸ்லிம்)

ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் கடனாளியாக மரணித்துவிட்டவர்களுக்கு ஜனாஸா தொழ வைக்காதவர்களாக இருந்தார்கள். (ஒரு நாள்) நபியவர்களிடம் ஒரு

மரணித்தவரை கொண்டு வரப்பட்டது. அப்பொழுது அவர்மீது கடன் உள்ளதா என அவர்கள் வினவினார்கள். "ஆம் இரு பொற்காசுகள் கடன் உள்ளன" எனத் தோழர்கள் விடையளித்தனர். (அப்படியானால்) உங்கள் தோழருக்கு நீங்கள் தொழுது கொள்ளுங்கள் என அவர்கள் பகர்ந்தார்கள். அப்பொழுது அபூகதாதா அன்ஸாரி (ரலி) அவ்விரு பொற்காசுகளை தான் கட்டிவிடுவதாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். (அதனைத் தொடர்ந்து) நபியவர்கள் அவருக்கு ஜனாஸா தொழவைத்தார்கள். **(அபூதாவூது)**

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு முஃமினின் உயிர், அவரது கடனை நிறைவேற்றப்படும் வரை, அவரது கடனுடன் பிணைக்கப் பட்டிருக்கும் (சுவனில் நுழைய முடியாது)

**(அஹ்மது, திர்மிதி, இப்னுமாஜா, தாரமி)**

பொதுவாக நிர்ப்பந்தத் தேவையிருந்தாலொழிய, இயன்ற வரை கடன் வாங்குவதைத் தவிர்ப்பதே நலமாகும். கடன் பெருகினால் கைசேதம் பெருகும்.

கடனை உங்களுக்கு எச்சரிக்கிறேன். நிச்சயமாக அது இரவில் கவலையும், பகலில் இழிவுமாகும் என மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். **(பைஹகீ)**

உங்களது உள்ளங்கள் நிம்மதியாகவிருந்த பின்பு அவைகளை பயமுறுத்தாதீர்கள் என மாநபி (ஸல்) ஒருமுறை கூறினார்கள். "இறைத்தூதரே! அவைகளை பயமுறுத்துவது எது? என தோழர்கள் வினவினார்கள். அதற்கு நபியவர்கள் 'கடன்' என விடை பகர்ந்தார்கள். **(அஹ்மது)**

அப்படியே கடன் வாங்கி விட்டாலும் அதனை அழகிய முறையில் திரும்பத் தருவதே நற்பண்பாகும்.

நபியவர்கள் நவின்றதாக அபூராபிஃ (ரலி) அறிவிக்கிறார்கள்: மனிதர்களிற் சிறந்தவர் (வாங்கிய) கடனை அழகிய முறையில் நிறைவேற்றுபவராவார். **(அபூதாவூது)**

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்



கிறார்கள்: வசதி படைத்தவர் (கடனை நிறைவேற்றாமல் வேண்டுமென்றே) தள்ளிப்போட்டுச் செல்வது அநியாயமாகும். **(அபூதாவூது)**

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: மக்களின் பொருள்களை திரும்ப நிறைவேற்றுவதை நாடியவராக ஒருவர், அவைகளை வாங்குவாரேயானால் அவருக்காக அல்லாஹ் நிறைவேற்றுவான் (அதனை நிறைவேற்ற அவருக்கு உதவுவான்) அதனை (திருப்பிக் கொடுக்கும் எண்ணமில்லாமல்) அழிப்பதற்காக வாங்குகிறானோ அவருக்கு அதனை அல்லாஹ் அழித்துவிடுவான். (அதனைத் திரும்பத்தர அல்லாஹ் அவருக்கு உதவமாட்டான்). **(புகாரி)**

அடியான் தனது மரணத்திற்கு முன், தன் கடன்கள் அனைத்தும் பரிபூரணமாக நிறைவேறிவிட்டதா என்பதை கவனமுடன் கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு அண்ணலாரின் வாழ்வில் அழகிய முன்மாதிரியைக் காண்கிறோம்.

நபியவர்கள் தங்கள் மரணத்திற்கு முன் நோய்வாய்ப் பட்டிருந்தபொழுது ஒருநாள் பழ்லுபின் அப்பாஸ் (ரலி) அவர்களின் கரத்தைப் பிடித்தவர்களாக நடந்து வந்து மின்பரில் அமர்ந்து மக்களுக்கு சொற்பொழிவாற்றினார்கள். அச்சொற்பொழிவின் ஒரு பகுதியில், "நான் யாரிடமாவது பொருள்கள் வாங்கியிருந்தால் அவர்கள் அப்பொருளை பெற்றுக்கொள்ளட்டும் எனக் குறிப்பிட்டார்கள். பின்னர் மின்பரிலிருந்து இறங்கி லுஹர் தொழுதார்கள். பின்னர் மீண்டும் மின்பரில் அமர்ந்து, முன்னர் தாங்கள் குறிப்பிட்ட அதே விஷயங்களையே மீண்டும் கூறினார்கள். அதுபொழுது ஒருவர் எழுந்து, நபியவர்கள் தனக்கு மூன்று திர்ஹம்கள் தரவேண்டியுள்ளது எனக் கூறினார். உடனே அதனை அவருக்கு வழங்கினார்கள்.

**(தாரிகுத் திப்ரி-அல்காமில் லிஇப்னி அதீர் மின்ஹாஜுஸ் ஸாலிஹீன்)**

நாயகத்தோழர்கள் தங்கள் கடனை நிறைவேற்ற தங்களது சொத்துக்களை விற்கவும் தயங்கவில்லை என்பதை பின்வரும் சம்பவம் எடுத்துரைக்கிறது.

மஆது பின் ஜபல் (ரலி) (அதிக) கடன்பட்டுவிட்டார்கள். அவருக்கு கடன் வழங்கியிருந்தவர்கள் நபியவர்களிடம் வந்தார்கள். நபியவர்கள் (அவரிடம் ஆலோசனை கலந்து கொண்டு) அவரது சொத்து முழுவதையும் விற்று அவரது கடனை அடைத்தார்கள். (முன்தகா-மிஷ்காத்)

மஆத் பின் ஜபல் (ரலி) அல்லாஹ்வின் பாதையில் வாரி வழங்கும் இளைஞராக இருந்தார்கள். எப்பொருளையும் தடுத்து வைத்துக் கொள்ளமாட்டார்கள். இதனால் அவர் களது க:டன் பெருகியது. (மிஷ்காத்)

கடன் வாங்கியவர், உண்மையில் அதனைத் திருப்பிக் கொடுக்க இயலாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால், கடன் வழங்கியவர், அவர் மீது இரக்கம் காட்டி தவணையை நீடித்துக் கொடுப்பதும், அல்லது அவரது கடனில் சிலதையோ அல்லது முழுவதையோ தள்ளுபடி செய்துவிடுவதும் மேலான நற்குணங்களில் அடங்கியதாகும்.

நபியவர்கள் நவில தான் செவிமடுத்ததாக அபூகதாதா (ரலி) அறிவிக்கிறார்கள்: கியாமத் நாளின் கஷ்டங்களை விட்டு அல்லாஹ், அவரை ஈடேற்றமாக்கி வைப்பது, யாருக்கு மகிழ்ச்சியளிக்குமோ அவர், கஷ்டப்படும் கடன் காரருக்கு (தவணையைத் தள்ளிப்போடுவது கொண்டு) மகிழ்ச்சியளிக்கட்டும்! அல்லது அவரது கடனை அவரை விட்டுத் தள்ளுபடி செய்துவிடட்டும்! (முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: ஒருவர் மக்களுக்கு கடன் வழங்குபவராக இருந்து வந்தார். அவர் தம் ஊழியருக்கு கூறினார்: கடனை நிறை வேற்ற முடியாத கஷ்டவாளி உம்மிடம் வந்தால் அவரது கடனை தள்ளுபடி செய்! அல்லாஹ் நமக்கு (நமது பாவங்களை) தள்ளுபடி செய்வான். (அதுபோன்றே) அவர்



அல்லாஹ்வை சந்தித்தார். அவரது பாவங்களை அல்லாஹ் தள்ளுபடி செய்துவிட்டான். (புகாரி, முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக ஹுதைபா (ரலி) அறிவிக் கிறார்கள்: அல்லாஹ்தஆலா செல்வத்தை அளித்திருந்த ஒரு மனிதனை அவனிடம் கொண்டு வரப்படும். உலகில் நீ என்ன செயல் புரிந்தாய் என அல்லாஹ் அவனிடம் கேட் பான். அன்று மக்கள் அல்லாஹ்விடம் எவ்விஷயத்தையும் மறைக்கமாட்டார்கள். அப்பொழுது அம்மனிதன் கூறு வான்: என் இரட்சகனே! நீ எனக்கு பொருள்களை வழங்கி யிருந்தாய்! நான் மக்களிடம் வியாபாரம் செய்பவனாக இருந்தேன். சலுகை செய்வது எனது குணங்களில் ஒன்றாக இருந்தது. நான் வசதியானவர் மீது இலகுவாகவும், கஷ்டப் படுபவருக்கு தவணைகள் வழங்கியும் நடந்து கொண்டேன். அப்பொழுது அல்லாஹ் கூறுவான்: நான் உன்னைவிட மிக சலுகை செய்பவன். ஆகவே என் அடியானைவிட்டும் பாவங்களை போக்கிவிடுங்கள். (முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: யார் கஷ்டப்படும் கடனாளிக்கு தவணை வழங்கு கிறாரோ, அல்லது அவனது கடனை தள்ளுபடி செய்கி றாரோ அவருக்கு, தன் நிழல் தவிர வேறு நிழல் இல்லாத கியாமத் நாளில், தன் அர்ஷின் நிழலில் அல்லாஹ் நிழல் தருவான். (திர்மிதி)

கடன்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு செல்வந்தர்கள் தங்கள் ஜகாத் தொகையிலிருந்து வழங்கி உதவி செய்யலாம். ஜகாத் பெற தகுதி பெற்ற எட்டு கூட்டத்தினரில், கடனாளிகளும் ஒரு கூட்டத்தினராவார்.

## இஸ்லாமிய சகோதரத்துவத்தின் கடமைகள்

இஸ்லாமிய இணைப்பு, இனம், மொழி, நிறம் ஆகியவை களைக் கடந்து நிற்கிறது. அதன் மாண்பும், சிறப்பும் உயர்ந்து விளங்குகிறது.

இஸ்லாமிய சகோதரத்துவம் இறைவனின் அருட் கொடையாகும். "நன்னம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவார்கள்'' என அல்லாஹ் தன் அருள்மறையில் "ஸூரத்துல் ஹுஜுராத்'தில் குறிப்பிடுகிறான்.

இஸ்லாமிய சகோதரத்துவம், தீனின் காரணமாக அல்லாஹ் அவனுக்கு வழங்கிய புனிதமிகு தொடர்பாகும்; உறவாகும். அதன் கடமைகளை அழகுற நிறைவேற்றி அதனைப் பேணிப் பாதுகாப்பது அவசியமாகும்.

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரரா வார். அவர் அவருக்கு அநீதி இழைக்கமாட்டார். அவருக்கு மோசடி செய்யமாட்டார். அவரிடம் பொய் கூறமாட்டார். ஒரு முஸ்லிம் தம் சகோதர முஸ்லிமை தாழ்வாக எண்ணு வதே, பாவத்தால் போதுமானது. ஒரு முஸ்லிமின் இரத்த மும், உடமையும், கண்ணியமும் (சிதைக்கப்படுவது) மற் றொரு முஸ்லிமின் மீது விலக்கப்பட்டதாகும். (முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: ஒரு முஃமின் மற்றொரு முஃமினுக்கு செய்ய வேண்டிய ஆறு (கடமைகள்) உள்ளன. (1) அவர் நோய்வாய்ப்பட்டால் அவரது உடல்நலத்தை விசாரிப்பார். (2) அவர் மரணித்துவிட்டால் அவரது நல்லடக்கத்தில் கலந்துகொள்வார். (3) அவரைச் சந்தித்தால் அவருக்கு ஸலாம் கூறுவார். (4) அவர் அழைத்தால் அவரது அழைப் பிற்கு பதிலளிப்பார். (5) அவர் தும்மினால் (யர்ஹமுக் குல்லாஹ் - அல்லாஹ் உமக்கு கிருபை செய்வானாக! என) அவருக்கு பிரார்த்தனை செய்வார். (6) அவர் முன்னிலையில் இருந்தாலும் மறைவில் இருந்தாலும் அவருக்கு நன்மையை நாடுவார். (நஸயீ)

முஸ்லிம் சகோதரரின் தேவைகளைப் பூர்த்தி செய்து உதவுவதின் மாண்புகளை பின்வரும் நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன.



யார் தம் சகோதரரின் தேவையைப் பூர்த்தி செய் கிறாரோ, அவர் தேவையை அல்லாஹ் பூர்த்தி செய்து வைப்பதில் உள்ளான். யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தைப் போக்கி வைக்கிறாரோ, அவருக்கு கியாமத் நாளின் கஷ்டங் களிலொன்றை அல்லாஹ் போக்கி வைப்பான். (புகாரி, முஸ்லிம்)

அடியான் தன் சகோதரனுக்கு உதவுவதில் உள்ள பொழுதெல்லாம் அல்லாஹ் அவனுக்கு உதவி செய்வதில் உள்ளான். (முஸ்லிம்)

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) கூறுகிறார்கள்: இம்மண்ணறையுடையவர்கள் (மாநபி (ஸல்) அவர்கள்) கூறக் கேட்டிருக்கிறேன். அவர்கள் கூறிய காலம் சமீபத்தில் தான் - கண்ணீர் உகுத்தவர்களாக அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) கூறினார்கள்: ஒரு முஸ்லிமின் தேவையைப் பூர்த்தி செய்து வைப்பதற்காக ஒருவர் சென்று முயற்சிப்பது பத்து ஆண்டுகளின் இஃதிகாபை விட (பள்ளியில் நிய்யத்துடன் தங்கியிருத்தல் எனும் வணக்கத்தைவிட) அவருக்கு மேலானது. (திப்ரானி பில் அவ்ஸதி, பைஹகீ)

சகோதர முஸ்லிமின் கவலையைப் பகிர்ந்துகொண்டு, ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறி உதவி செய்து கொள்ள வேண்டுமென்ற பண்பை பின்வரும் நபிமொழியின் கருத்து எடுத்தியம்புகிறது.

'முஃமின்கள் ஒருவரையொருவர் நேசிப்பதிலும், ஒருவருக்கொருவர் இரக்கம் காட்டிக் கொள்வதிலும் அவர் களுக்கு உவமை, ஓர் உடல் போன்றாகும். அதில் ஓர் உறுப்பு வேதனை கொண்டு முறையிட்டால், அதன் மற்ற பாகங்களும் கண்விழிப்பைக் கொண்டும், காய்ச்சலைக் கொண்டும் முறையிடுகின்றன. (திர்மிதி)

இச்சகோதரப் பாசம் இந்த உம்மத்தின் முதல் அணி யினரான சஹாபாக்களிடம் நிரம்பி வழிந்திருந்தது. அதன் உயர்நிலையை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) ஓர்

அறிவிப்பில் கூறும்பொழுது, "ஒருவர் தம் வெள்ளி, பொன் நாணயங்களுக்கு தன் முஸ்லிம் சகோதரரைவிட அதிக உரிமை பெற்றவர் வேறு எவரும் இல்லை எனக் கருதிச் செயல்படும் காலமாக அது இருந்தது" என விளக்கு கிறார்கள். (அதபுல் முப்ரது)

பிறர் நலம் பேணல், தியாகம், அர்ப்பணிப்பு ஆகிய அரிய பண்புகள் அத்தோழர்களில் மிகைத்திருந்தன.

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: நாயகத்தோழர்களில் ஒருவருக்கு ஓர் ஆட்டின் தலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அவர் தம்மைவிட தம் இன்ன தோழர் மிகத் தேவையானவர் என அவரிடம் அனுப்பினார். அவர் வேறொரு தோழரிடம் அனுப்பினார். இவ்வாறே ஒருவர் மற்றொருவரிடம் அனுப்பி ஏழு பேர்களிடம் சுற்றிவிட்டு முதல் நபரிடமே அது வந்து சேர்ந்தது. (அல்அர்கானுல் அர்பஆ-இஹ்யா உலூமித்தீன்)

இம்மாண்புமிகு பண்புகள், நாயகத்தோழர்களை அடுத்து வந்த தாபியீன்களிலும் (நாயகத்தோழர்களின் தோழர் களிலும்) இலங்கியது.

தாபியீன்களில் தலைசிறந்தவரான இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்) கூறுகிறார்கள்: நான் சில முஸ்லிம்களை அறிவேன். காலையில் அவர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு சொல்வர், "என் குடும்பத்தினரே! உங்கள் அனாதைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! என் குடும்பத்தினரே! உங்களது ஏழைகளை கவனித்துக்கொள்ளுங்கள்! என் குடும்பத்தினரே! உங்கள் அண்டை வீட்டாரைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

(அதபுல் முப்ரது)

நபியவர்களின் குடும்பத்தார்களிலும் இப்பண்புகள் இலங்கி வந்தன. அலி (ரலி) அவர்களின் பேரர் அலி பின் ஹுஸைன் குறித்து பிரபல வரலாற்றாசிரியர் முஹம்மது பின் இஸ்ஹாக் கூறுகிறார்: திருமதீனாவில் சிலர் இருந்தனர். அவர்கள் எங்கிருந்து உணவு பெறுகிறார்கள்; அவர்களுக்கு



யார் கொடுக்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. அலி பின் ஹுஸைன் எனும் இப்பெருமகனார் மரண மடைந்தபொழுது, அவ்வுணவு வகைகள் அவர்களுக்கு கிடைப்பதும் நின்றுவிடுகிறது. அப்பொழுதுதான் அவர் களுக்கு இரவில் உணவு கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தவர், அலி பின் ஹுஸைன் அவர்கள்தான் என்பது தெரியவந்தது. அவர்கள் மரணமடைந்தபொழுது அவர்களது முதுகிலும், தோள்பட்டையிலும் ஏழை எளியவர்கள் மற்றும் விதவைகளின் இல்லங்களுக்கு உணவுப் பொருள்கள் அடங்கிய தோல் பைகளைச் சுமந்து சென்றதின் அடையாளத் தழும்புகள் இருந்ததை மக்கள் பார்த்தார்கள். (அல்அர்கானுல் அர்பஆ)

தங்கள் இஸ்லாமிய சகோதரர்களுக்கு நன்மைகளை ஏவி தீமைகளை விலக்கிவருதல் வேண்டும். தாங்கள் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டு அவன் திருப் பொருத்தத்தை அடைவதுபோல, அவர்களும் அடைய வேண்டும் என்ற ஆர்வமும் கவலையும் இருக்க வேண்டும். "நீங்கள் மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயத்தினர், நன்மையை ஏவுகிறீர்கள். தீமையை விலக்குகிறீர்கள் என அல்லாஹ் தனது அருள்மறையில் முஃமின்களைப் புகழ்ந்துரைக்கிறான்.

உலகின் அனைத்து முஃமினான ஆண் பெண்களின் இம்மை மறுமை வாழ்வின் நலன்களுக்காக வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை இறைஞ்சி வரவேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஐவேளை, ஓர் இமாமின் கீழ் இறையில்லத்தில் அரசாள்பவர்கள் முதல் குடிமக்கள் வரை, செல்வந்தர்கள் முதல் ஏழைகள் வரை தோளோடு தோள் அணிவகுத்து நின்று தொழுவது, இஸ்லாமிய சகோதரத் துவத்தின் அழகிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

ஹாஜிகள், அரபாத் பெருவெளியில் இனம், மொழி, நிறம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டு ஒரேவித ஆடையில்,

ஒரே குரலில் தல்பியா எனும் இறைப்புகழ் முழங்கி இறைவனிடம் பிரார்த்திக்கும் காட்சி, இஸ்லாமிய சகோதரத்துவத்தின் இணையில்லா மாண்பினை எடுத்துணர்வதாக உள்ளது.

## முதியோர்-இளைஞர்கள் கடமைகள்

முதியோர், இளைஞர்கள் மீது அன்பும் பரிவும் இரக்கமும் காட்டி வரவேண்டும். அல்லாஹ் வழங்கியிருக்கும் அறிவு, அனுபவம் ஆகியவைகளை இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்லி நல்வழி காட்டுதல் வேண்டும்.

முதியோர் நல்வணக்கங்களின்பால், நற்செயல்களின்பால் இளைஞர்களுக்கு ஆர்வமூட்டி வருவதுடன் தாங்களும் அவைகளைக் கடைபிடித்து சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்து வரவேண்டும்.

முதுமை வாழ்வின் இறுதிப் பருவமாகும். அதன்பின் வேறு பருவங்கள் இருப்பதில்லை. உலகைவிட்டு நீங்கி மறுமைக்கு பயணமாகும் அப்பருவத்தில் - அல்லாஹ்வின் சந்திப்பு நெருங்கிவிட்ட அப்பருவத்தில் இம்மையின் ஆசைகளைக் குறைத்து, மறுமையின் நல்வாழ்வின் தேட்டங்களில் இருப்பது அவசியமாகும். அதற்கு அடிப்படையாக நல் வணக்கங்களிலும், நற்பணிகளிலும் ஆர்வமுடன் அதிகம் ஈடுபட்டு வரவேண்டும்.

நல்லுணர்வு பெறுவோர் அதில் நல்லுணர்பு பெறக் கூடிய ஒன்றை (ஒரு நீளமான வயதை) உங்களுக்கு நாம் வயதாகத் தரவில்லையா என திருக்குர்ஆனின் "ஸூரத்துல் பாத்திர்" அத்தியாயத்தில் அல்லாஹ் கேட்கிறான்.

அவ்வயது அறுபது என நாயகத்தோழர் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்களும், திறனாய்வாளர்களான மார்க்க மேதைகளும் விளக்கமளிக்கின்றனர்.

(ரியாலுஸ் ஸாலிஹீன்)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: எவரது தவணையை (வயதை) அறுபது வயது வரை அல்லாஹ் பிற்படுத்தினானோ அவரின் (அவர் நல் அமல்கள் செய்யாமலிருந்ததற்காக அவர் கூறும்) எவ்வித தங்கடங்களையும் (காரணங்களையும்) அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான். (புகாரி)

மதீனாவாசிகள் (சஹாபாக்கள்) நாற்பது வயதை அடைந்துவிட்டால் நல்வணக்கங்களுக்காக ஒதுங்கி விடுவார்கள். (ரியாலுஸ்ஸாலிஹீன்)

நபியவர்களுக்கு "இதாஜாஅ" எனத் துவங்கும் "ஸூரத்துன்னஸ்ரு" அத்தியாயம் ஹிஜ்ரி பத்தாம் ஆண்டில் அவர்களது இறுதி ஹஜ்ஜில் மினாவில் வைத்து இறங்கியது. அதில் அவர்களது மரணம் நெருங்கிவிட்டதன் சமிக்ஞை இருந்தது. அதன்பின்,

ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஸ்தஃபிருக்க வ அதூபு இலைக்க - இறைவா! உனது புகழுடன் உன்னைத் தஸ்பீஹ் செய்கிறேன். உன்னிடம் பிழை பொறுப்புத் தேடுகிறேன். உன்னிடமே மீளுகிறேன் என்ற இவ்வார்த்தைகளை அதிகம் கூறுபவர்களாக இருந்தார்கள். இதனை அன்னை ஆயிஷா (ரலி) பின்வரும் ஹதீஸில் எடுத்துரைக்கிறார்கள்.

நபியவர்கள் மரணமடைவதற்கு சமீபமாக "ஸுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக அஸ்தஃபிருக்க வதூபு இலைக்க" என அதிகம் கூறுபவர்களாக இருந்தார்கள். (முஸ்லிம்)

அண்ணலாரின் இவ்வழகிய முன்மாதிரியைப் பின்பற்றி அனைவரும், குறிப்பாக முதியோர், தங்கள் இரட்சகனை அதிகம் தஸ்பீஹ் செய்தும், புகழ்ந்தும், அவனிடம் பிழை பொறுப்பு இறைஞ்சியவராக இஸ்திஃபார், தவ்பா செய்தும் வரவேண்டும்.

இளைஞர்கள் தங்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கும் இளமை எனும் அளப்பரிய அருட்கொடையின் மாண்புகளை உணர்ந்து செயல்படவேண்டும். வலிமையும், சக்தியும்

பொருந்திய அப்பருவத்தில் அளவிலா நன்மைகளைச் செய்து இறைதிருப்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இளைஞர்கள் பெரியோர்களைக் கண்ணியப்படுத்தி அவர்களது அன்பு மற்றும் துஆக்களை பெற முயற்சிக்க வேண்டும். அவர்களது ஆழிய, முதிர்ந்த ஆலோசனைகளைக் கேட்டுப் பெறவேண்டும்.

நபியவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: எந்த ஒரு வாலிபரும் ஒரு வயோதிகரை அவரது வயதுக்காக கண்ணியப்படுத்துவாரேயானால், அவரது வயோதிகத்தின் பொழுது அவரைக் கண்ணியப்படுத்துபவரை அல்லாஹ் ஏற்படுத்தியே தவிர வேறில்லை. **(திர்மிதி)**

ஒருவர் அமர்ந்திருக்கும்பொழுது, அவரருகில் வயது முதிர்ந்தரொருவர் வந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டால் அவர்மீது இரக்கம் காட்டி அவருக்கு அவரது இடத்தை அளிப்பது, கனமான சுமையை அவர் சுமந்து வந்தால் அவரது சுமையைப் பகிர்ந்து கொள்வது, பஸ், இரயில் போன்ற வாகனங்களில் அவர் ஏற இறங்கச் சிரமப்பட்டால் அவருக்கு அதில் உதவுவது, போக்குவரத்து நிறைந்த சாலையை அவர் கடக்க முற்பட்டால் அதற்கு உதவுவது, அவைகளில் அவர்களுக்கு முன்னிலை வழங்கிச் சிறப்பிப்பது போன்றவை, அவர்களைக் கண்ணியப்படுத்தும் வகைகளைச் சார்ந்தவைகளாகும்.

இளைஞர்கள் பொதுநலப் பணிகளில் ஆர்வமுடன் அதிகம் பங்கெடுத்து வரவேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தங்கள் இளமையில் மக்களுக்கு நம்பிக்கையுடன் பொதுநலப் பணிகள் ஆற்றிவந்தார்கள். அவைகளைப் போற்றி மக்கள் அவர்களுக்கு "அல்அமீன் நம்பிக்கையாளர்", ''அஸ்ஸாதிக்- உண்மையாளர்'' என்ற பட்டங்களை வழங்கினார்கள். அவர்களின் மக்கள் நலப்பணிகளின் பசுமையான நினைவுகள் மக்கமா நகர மக்களின் நெஞ்சங்களில் என்றும் இடம் பெற்றிருந்தன. அதனால்தான் அவர்



களது ஏகத்துவப் பிரச்சாரத்தை துவக்கத்தில் அவர்கள் ஏற்க மறுத்தபொழுதும், 'அண்ணலார் நம்பிக்கைக்குரியவர்' என்ற கருத்தில் அவர்கள் மாறுபடவில்லை. அப்பொழுதும் தங்கள் பொருள்களை அமானிதமாக அவர்களிடமே கொடுத்து வைத்திருந்தனர்.

அண்ணலாரின் மக்கள் நலப்பண்புகளை அன்னை கதீஜா (ரலி) அவர்கள் எடுத்துரைக்கும்பொழுது, "தாங்கள் உற்றார் உறவினரை ஆதரிக்கிறீர்கள்! மக்களின் சிரமங்களைச் சுமந்து கொள்கிறீர்கள். ஏழைகளுக்காக சம்பாதிக்கிறீர்கள்! ஆபத்துகளில் மக்களுக்கு உதவுகின்றீர்கள்! எனப் பகர்ந்தார்கள். **(புகாரி)**

இஸ்லாமிய இளைஞர்கள் பலர் மக்கள் நலப்பணிகளில் ஈடுபட்டு சமுதாயத்திற்கு சிறப்புச் சேர்க்கின்றனர். நன்மைகள் அதிகம் பெறுகின்றனர். மேலும் அதிகமாக நமது சமுதாய இளைஞர்கள் மக்கள் நலப்பணிகளில் ஈடுபட்டு அளப்பரிய நன்மைகளைப் பெற விழைவார்களாக! அல்லாஹ் அருள்புரிவானாக!

இளமைப் பருவத்தை நல்வணக்கங்களில் கழித்த வாலிபருக்கு, கியாமத் நாளில் அல்லாஹ் விசேஷமாக தன் அர்ஷின் நிழலை வழங்குவான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: ஏழு பேர்களுக்கு தன் நிழல் தவிர வேறு நிழல் இல்லாத கியாமத் நாளில் அல்லாஹ் நிழலளிப்பான். (1) நீதமிகு தலைவர். (2) அல்லாஹ்வின் வணக்கத்தில் வளர்ந்த வாலிபர். (3) தனிமையில் அல்லாஹ்வை திக்ரு செய்து (அவனது அச்சத்தால்) இரு கண்களும் கண்ணீர் உகுத்தவர். (4) பள்ளி வாயிலுடன் உள்ளம் இணைக்கப்பட்டவர். (5) அல்லாஹ்வுக்காகவே நேசித்துவரும் இருவர் - அந்நேசத்தின் மீதே ஒன்று கூடி அதன் மீதே பிரிந்தவர்கள். (6) அழகும் அந்தஸ்தும் வாய்ந்த பெண் ஒருவள் (தீமையான செயலுக்கு)

அவரை அழைத்தபொழுது "நான் அல்லாஹ்வை பயப் படுகிறேன்" எனக் கூறியவர். (7) தம் வலக்கரம் செலவழித் தவையை தம் இடக்கரம் அறியா வகையில் (மறைமுகமாக) தர்மம் செய்தவர். (புகாரி)

இறை வணக்கத்தில் வளர்ந்த வாலிபராக அவர் திகழும் பொழுது அவரது மனைவி மக்கள் குடும்பத்தினர் அனை வரிலும் நல் அமல்களின் ஆர்வம் பெருகும். இறையருள் நிறைந்த குடும்பமாக அது திகழும். அது அவரது வாழ்வில் அவர் அடையப்போகும் பல்வேறு சிறப்புகளுக்கும், அந்தஸ்துகளுக்கும் அடித்தளமாக அமையும்.

## பயணத்தோழர்களுக்கு உதவுதல்

திருக்குர்ஆனில் "ஸூரத்துன்னிஸா" அத்தியாயத்தில் "வஸ்ஸாஹிபி பில்ஜன்பி" என அல்லாஹுதஆலா கூறும் வார்த்தைகளுக்கு பயணத்தோழர் என்பது கருத்தாகும் என திருக்குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர் கூறுகிறார்கள். அதன்படி அவ்வசனத்தில், பயணத்தோழருக்கு உதவி செய்யுமாறு அல்லாஹ் எடுத்துரைக்கிறான்.

பயணத்தோழர்கள் ஒருவருக்கொருவர் உதவி தங்கள் சிரமங்களை பகிர்ந்துகொள்ளும் பொழுது பயணம் மகிழ்வாக மனநிறைவாக அமையும்.

அபூஸயீதில் குத்ரீ (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர் களுடன் நாங்கள் (ஒருமுறை) பிரயாணத்தில் இருந்த பொழுது ஒருவர் தம் வாகனத்தில் வந்தார். அப்பொழுது தம் பார்வையை இடதுபுறமும் வலதுபுறமும் திருப்ப ஆரம் பித்தார். அப்பொழுது நபியவர்கள் "யாரிடம் வாகன முதுகு மீதமுள்ளதோ அவர் வாகன முதுகு இல்லாதவருக்கு வழங்கி அவர் மீது இரக்கம் காட்டட்டும். யாரிடம் கட்டிச் சாதம் மீதமுள்ளதோ அவர் கட்டிச்சாதம் இல்லாதவருக்கு வழங்கி அவர்மீது இரக்கம் காட்டட்டும். மேலும் அபூஸ யீதில் குத்ரீ (ரலி) கூறுகிறார்கள்: இவ்வாறே நபியவர்கள்



பொருட்களின் வகைகளைக் கூறிக்கொண்டு சென்றார்கள். எந்த அளவிற்கென்றால், மீதமான பொருட்களில் எங்களி லொருவருக்கு எத்தகு உரிமையுமில்லை என நாங்கள் எண்ணும் அளவிற்கு. (முஸ்லிம்)

பொதுவாக மனிதர்களுக்கு பிரயாணத்தின்பொழுது ஏற்படும் தேவைகள் கடுமையானதாகும். தொலைதூர பயணங்களில், கையில் பணமிருந்தால் கூட நீண்ட தூரத்திற்கு உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு கடைகள் அல்லது வாய்ப்புகள் இல்லாமல் இருக்கலாம். குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படலாம். திடீரென உடல்நலக்குறைவு ஏற்படலாம். வாகனங்களில் தடங்கல் ஏற்படலாம். ஆகவே பயணிகள் ஒருவருக்கொருவர் இயன்றளவு உதவி ஒத்துழைப்பு நல்கிக் கொள்ள வேண்டுமென மேற்காணும் நபிமொழியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பயணத்திற்குமுன் நல்ல பயணத்தோழர்களை தேர்ந்தெ டுத்துக் கொள்வது நலமாகும். "வீட்டிற்கு முன், அண்டை வீட்டாரும், வழித்தடத்திற்கு முன், பயணத் தோழரும், பயணத்திற்கு முன் கட்டிச்சாதமும் தேடப்பட வேண்டி யவைகளாகும் என மாநபி (ஸல்) அவர்கள் ஒரு மணி மொழியில் கூறியுள்ளார்கள். (அல்கதீப்-மின்ஹாஜூஸ் ஸாலிஹீன்)

பயணத்தில் குறைந்தது மூவர் இருப்பதையும் அதில் ஒருவர் அமீராக-தலைவராக இருப்பதையும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் அழகிய வழிமுறையாக ஆக்கி யுள்ளார்கள்.

பயண அமீர், தம் பயண அணியினருக்கு பணிவிடைகள் செய்து அவர்களை நன்முறையில் வழி நடத்திச் செல்வார் "பயண அணியின் தலைவர் அவர்களுக்கு பணிவிடை புரிப வராவார்" என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (பைஹகீ)

ஒரு பயணி நோயாளியாக ஆகிவிட்டால், அவரது பயணத்தோழர்கள் அவருடன் தங்கி அவருக்கு சிகிச்சை

அளிப்பது, நோய்வாய்ப்பட்ட அப்பயணியின் உரிமையாகும் என மற்றொரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (தஹாவி)

ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் தங்கள் பயணத்தில் பின்தங்கி (நோயாளிகள், நடக்கவியலாதவர்கள்) போன்ற பலவீனமானவரை தங்களுடன் மென்மையாக அழைத்துச் செல்வார்கள். தங்கள் வாகனத்தின் பின்பகுதியில் அவரை ஏற்றிக்கொள்வார்கள். அவருக்காக துஆ பிரார்த்தனை செய்வார்கள். (அபூதாவூது)

தற்காலத்தில் பஸ், இரயில், விமானம் போன்ற வாகனங்களில் பயணம் செய்யும்பொழுது, பயண அணி, பயண அமீர் போன்ற ஏற்பாடுகள் ஒருவேளை அமையாவிட்டாலும், தங்களுடன் பயணம் செய்யும் சக பயணிகளுடன் நன்முறையில் நடந்துகொள்ள வேண்டும். இயன்றளவு இடம் அளித்தல், பயணச்சாமான்களை ஏற்றி இறக்குவதில் துணைபுரிதல், உணவு தண்ணீர் போன்ற அத்தியாவசியத் தேவைகளில் ஒத்துழைப்பு நல்குதல் போன்றவைகளைக் கொண்டு அவர்களுக்கு உதவவேண்டும். பயணிகளில் எவருக்கும் எவ்வகையிலும் இடையூறு அளித்தல் கூடாது.*

## வாக்குறுதி, ஒப்பந்தம் நிறைவேற்றல், நம்பிக்கைப் பொருளை ஒப்படைத்தல்

நன்னம்பிக்கையாளர்களே! ஒப்பந்தங்களை முழுமையாக நிறைவேற்றுங்கள்! என திருக்குர்ஆனில் "மாயிதா" அத்தியாயத்தின் முதல் வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

அல்லாஹ்வுடனான ஒப்பந்தத்தையும், உங்களில் சிலர் சிலருடனான ஒப்பந்தத்தையும் நிறைவேற்றுங்கள் என்பது

★ பயணம் சம்பந்தமான ஸுன்னத்தான வழிமுறைகள் நமது மற்றொரு நூலான "குர்ஆன் ஹதீஸ் ஒளியில் இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்" எனும் நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.



இவ்வசனத்தின் கருத்தாகும்.

"ஒப்பந்தங்களை முழுமையாக நிறைவேற்றுங்கள்! நிச்சயமாக ஒப்பந்தம் (அல்லாஹ்விடம்) வினவப்படக் கூடியதாக உள்ளது" என திருக்குர்ஆனின் பனூ இஸ்ராயீல் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான். (அல்குர்ஆன் 17-34)

தங்கள் அமானிதங்களையும், ஒப்பந்தங்களையும் பேணி வரும் முஃமின்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள் என திருக்குர்ஆனின் முஃமின் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான். ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவது அடியார் அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவ்வாறு நிறைவேற்றப்படாவிடில், சமுதாயத்தில் அமைதியும் நிம்மதியும் குலையும். சண்டை சச்சரவுகள் வம்பு வழக்குகள் பெருகும்.

நபியவர்கள் நவின்றதாக அப்துர் ரஹ்மான் பின் அபீகுராது (ரலி) அறிவிக்கிறார்கள்: எவருக்கு அல்லாஹ்வும், அவன் திருத்தூதரும் அவரை நேசிப்பது மகிழ்வளிக்குமோ அவர், பேசினால் உண்மையே பேசட்டும். அவர் நம்பப்பட்டால், அவர் மீதுள்ள நம்பிக்கையை காப்பாற்றட்டும் தம்முடன் நெருங்கியுள்ளவர்களுடனுள்ள தொடர்பை அழகாக்கி வைக்கவும். (பைஹகீ)

அபூஉமாமா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் இறுதி ஹஜ்ஜில், தங்கள் சொற்பொழிவில் கூறக்கேட்டுள்ளேன்: இரவல் வாங்கப்பட்ட பொருள், திரும்ப ஒப்படைக்கப்படுவதாகும். கடன் நிறைவேற்றப்படுவதாகும். பிணை ஏற்றுக்கொண்டவர் (தாம் ஏற்றுக்கொண்ட பிணைக்கு) கடன்காரர் ஆவார். (அத்தாஜுல் ஜாமிவுல் உஸூல்)

நபி இஸ்மாயீல் (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் தன் திருமறையில் கூறும்பொழுது, அவர் வாக்குறுதி நிறைவேற்றுபவராக இருந்தார் எனப் புகழ்ந்துரைக்கிறான்.

"சங்கையானவன், வாக்குறுதி காப்பான்" என அரபியில்

ஒரு முதுமொழியுண்டு.

வாக்குறுதிக்கு மாறு செய்வது நயவஞ்சகனின் அடையாளங்களில் ஒன்றாக உள்ளது. நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும். (1) அவன் பேசினால் பொய்யுரைப்பான். (2) வாக்குறுதி வழங்கினால் மாறு செய்வான். (3) அவனை நம்பப்படுமானால் மோசடி செய்வான். (புகாரி, முஸ்லிம்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிறப்பாகவும் முழுமையாகவும் நிறைவேற்றினார்கள். திருமதீனாவில் யஹூதிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், ஹுதைபிய்யாவில் மக்கா வாசிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், மற்றும் பல்வேறு கோத்திரத்தார்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் சிறப்பாகவும் முழுமையாகவும் நிறைவேற்றினார்கள்.

நபியவர்கள் தங்கள் மரணத்திற்கு சமீபத்தில் வழங்கியிருந்த ஒரு சில வாக்குறுதிகளை பொறுத்தமட்டில், அவைகளை நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பம் வருமுன், அவர்களது மரணம் நிகழ்ந்துவிட்டதால், அவைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பம் வந்ததும் கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் அவைகளை நிறைவேற்றிவிட்டார்கள்.

ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள்: பஹ்ரைனின் பொருள் (பைத்துல்மால் எனும் பொது நிதி) வந்தால், உமக்கு 'இவ்விதம், இவ்விதம், இவ்விதம் நான் கொடுப்பேன் என நபியவர்கள் எனக்கு கூறினார்கள். அவர்கள் மரணமடையும் வரை பஹ்ரைனின் பொருள் வரவில்லை. பின்னர் பஹ்ரைனின் பொருள் வந்தபொழுது (அப்பொழுது கலீஃபா பொறுப்பேற்றிருந்த) அபூபக்கர் (ரலி) (அதனை வழங்க) உத்தரவிட்டார்கள். அப்பொழுது மக்களை அழைத்து யாருக்காவது நபியவர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தால்,



அல்லது அவருக்கு அவர்கள் கடன் கொடுக்க வேண்டியிருந்தால் நம்மிடத்தில் வரட்டும்" எனக் கூறினார்கள். நான் அவர்களிடம் சென்று நபியவர்கள் எனக்கு இன்ன இன்னதை வாக்களித்துள்ளார்கள் எனக் கூறினேன். உடனே அபூபக்கர் (ரலி), தங்கள் இருகரங்கள் நிறைய (நாணயங்களை) எனக்கு அள்ளிப்போட்டார்கள். அவைகளை நான் எண்ணினேன். அவை ஐநூறு திர்ஹம்களாக இருந்தன. இது போன்ற இரண்டு மடங்கை மேலும் எடுத்துக்கொள்வீராக! என அபூபக்கர் (ரலி) எனக்கு கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

அபூஜுஹைபா (ரலி) கூறுகிறார்கள்: நபியவர்கள், எங்களுக்கு பதிமூன்று பெண் ஒட்டகைகள் வழங்க உத்தரவிட்டார்கள். நாங்கள் அதனைப் பெற்றுக்கொள்ள (திருமதீனா) சென்றோம். அப்பொழுது நபியவர்களின் மரணச் செய்தி எங்களுக்கு வந்தது. ஆகவே எங்களுக்கு (அப்பொழுது) நாயகத்தோழர்கள் எதுவும் அளிக்கவில்லை. பின்னர் அபூபக்கர் (ரலி) கலீஃபா பொறுப்பேற்றுக் கொண்டதும், யாருக்கு நபியவர்களின் வாக்குறுதி உள்ளதோ அவர்கள் (நம்மிடத்தில்) வரட்டும் என்றார்கள். நான் எழுந்து அவர்களிடம் விபரத்தைக் கூறினேன். உடனே அவ்வொட்டகைகளை எங்களுக்கு வழங்க உத்தரவிட்டார்கள். (திர்மிதி)

இந்த ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டு மரணமடைந்தவரின் வாக்குறுதிகளை, அவருக்குப் பின் பொறுப்பேற்றவர் நிறைவேற்றுவது முஸ்தஹப்-விரும்பத்தக்கதாகும் என மார்க்க அறிஞர்கள் கூறுகின்றனர். (மிர்காத்)

நபியவர்கள், நபித்துவத்திற்கு முன் இளமையிலேயே வாக்கு காக்கும் வாய்மையாளராக விளங்கினார்கள். அக்காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை பின்வரும் அறிவிப்பில் காணலாம்.

அப்துல்லாஹ் பின் அபீஹஸ்மா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்களுக்கு நபிப்பட்டம் வருமுன் அவர்களிடம்

நான் ஒருமுறை வியாபாரம் செய்தேன். அவர்களிடமிருந்து ஒரு பொருளை விலைக்கு வாங்கினேன். அதன் (கிரயத்தில்) கொஞ்சம் பாக்கி ஏற்பட்டுவிட்டது. நான் அதனை அவ்விடத்திற்கே கொண்டு வந்து அவர்களிடம் தருவதாக வாக்களித்துவிட்டுச் சென்றேன். பின்னர் நான் அதனை மறந்துவிட்டேன். மூன்று நாட்களுக்குப் பின் அது எனக்கு ஞாபகம் வந்தது. (அந்நேரத்தில் நான் சென்று பார்க்கும் பொழுது) அவர்கள் அதே இடத்தில் இருந்தார்கள். அப்பொழுது என்னிடம், "நம்மைச் சிரமத்தில் ஆழ்த்திவிட்டீரே! மூன்று தினங்களாக உம்மை எதிர்பார்த்து நான் இங்கு உள்ளேன்" எனக் கூறினார்கள். (அபூதாவூது)

வாக்குறுதி கடனைப்போன்ற அந்தஸ்தில் உள்ளது. "வாக்குறுதி கடன் ஆகும்" என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (மிர்காத்)

எனினும் வாக்குறுதி காக்க வேண்டுமென்ற உறுதியான எண்ணமும், முயற்சியும் இருந்தும் சிலவேளை தவிர்க்க முடியாத காரணங்களால், அதனை நிறைவேற்ற இயலாமற் போய்விடின், அல்லாஹ் அவனை பாவத்தைவிட்டும் காப்பாற்றுகிறான்.

நபியவர்கள் நவின்றதாக ஜைதுபின் அர்கம் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் தம் சகோதரருக்கு வாக்களித்து, அதனை முழுமையாக நிறைவேற்றுவதே அவரது உறுதியான எண்ணமாக உள்ள நிலையில் (ஏதாவது நிர்பந்தத் தங்கடங்களால்) அவர் அதனை நிறைவேற்றவில்லையாயின், அவர் மீது பாவம் இல்லை. (அபூதாவூது, திர்மிதி)

அவர் தம் நிலையை, தான் வாக்களித்த சகோதரருக்கு விளக்கிக் கூறிவிடவேண்டும். அவரும் அதனை ஏற்று பொருந்திக்கொள்வதே நற்பண்பாகும்.

ஒருவர் மற்றொருவருக்கு (ஓரிடத்திற்கு வருவதாக) வாக்களித்து (இருவரும் அவ்விடத்திற்கு வந்து சந்திப்பதாக



பேசியிருந்து) இவ்விருவரில் ஒருவர் தொழுகை நேரம் வரை அங்கு வரவில்லையென்றால், வந்தவர் தொழுகைக்கு சென்று விடுவாராயின் அவர் மீது பாவமில்லை என மாநபி (ஸல்) ஒரு மணிமொழியில் கூறியுள்ளார்கள். (ரஜீன்)

தொழுகை தீனின் மிக முக்கியக் கடமையாதலால், ஒருவரை எதிர்பார்ப்பது அந்நேரத்தின் தொழுகையை விடக்கூடிய வகையில் அமைந்துவிடலாகாது என்பதின் மீது இந்நபிமொழி அறிவிக்கிறது. மேலும் நம் திட்டங்களும், பணிகளும் அந்தந்த நேரங்களின் தொழுகைகளுக்கு பாதிப்பு இல்லா வகையில் அமையப் பெற வேண்டுமென்ற சமிக்ஞையும் இந்நபிமொழியில் அடங்கியுள்ளது.

மேலும் நம்பிக்கைப் பொருள்களை உரியவரிடம் ஒப்படைத்து அமானிதம் காப்பது, அடியார்களின் கடமைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அல்லாஹ் தன் அருள்மறையில், "நம்பிக்கைப் பொருள்களை அவைகளுக்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டுமென நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு ஏவுகிறான்" என குறிப்பிடுகிறான். (அல்குர்ஆன் 4-58)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி), அனஸ் (ரலி) ஆகியோர் அறிவிக்கிறார்கள்: உம்மை நம்பியவருக்கு அமானிதத்தை-நம்பிக்கையை நிறைவேற்றுவீராக! உமக்கு மோசடி செய்தவருக்கு நீர் மோசடி செய்ய வேண்டாம். (ஸுபுலுஸ் ஸலாம்)

அமானிதத்தை நிறைவேற்றுவதைப் பற்றி அண்ணலார் தங்கள் மரணித்திற்கு முன் நோய்வாய்ப்பட்டிருந்தபொழுது ஒருநாள் ஆற்றிய சொற்பொழிவில், மக்களே! யாரிடத்தில் (பிறரது) பொருள் இருக்கிறதோ அவர் அதனை நிறைவேற்றிவிடட்டும்; உலகின் கேவலம் குறைவானதல்ல. அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உலகின் கேவலம் மறுமையின் கேவலத்தைவிட இலகுவானதாகும் எனக் குறிப்பிட்டார்கள். (தாரிகுத்திப்ரீ 2-192 அல்காமிலி இப்னி அதீர் 2-254)

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் மக்காவாசிகள் பல் வேறு பொருள்களை கொடுத்து வைத்திருந்தனர். நபியவர் கள் இரவோடு இரவாக மக்காவிலிருந்து மதினாவுக்கு ஹிஜ்ரத் புறப்பட்ட அவசர வேளையில், அவ்வமானிதப் பொருள்களை உரியவர்களிடம் நேரில் ஒப்படைக்க இயல வில்லை. ஆதலால் ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களிடம் அவ்வ மானிதப் பொருள்களை ஒப்படைத்து, அவைகளை உரியவர்களிடம் சேர்ப்பித்துவிட்டு பின்னர் ஹிஜ்ரத் புறப் பட்டு வருமாறு கட்டளையிட்டார்கள். அதன்படியே நபியவர்களின் அமானிதப் பொருள்களை அலி (ரலி) அவர்கள் மக்களிடம் சேர்ப்பித்துவிட்டு சில தினங்களில் ஹிஜ்ரத் புறப்பட்டார்கள்.

அமானிதத்தை நிறைவேற்றாதவரின் ஈமான் பரிபூரண ஈமான் அல்ல; ஒப்பந்தத்தை நிறைவேற்றாதவரின் தீனின் தொடர்பு பரிபூரணமானதல்ல என்ற கருத்தை ஒரு ஹதீஸில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (அஹ்மது)

கலீஃபா உமர் (ரலி) அவர்களிடம் ஒரு வாலிபரை இரண்டு இளைஞர்கள் பிடித்து வந்தனர். இவர் எங்களது தந்தையை கொன்றுவிட்டார். ஆகவே தாங்கள் இவரிடம் கிஸாஸ் - பழிக்குப் பழி வாங்க வேண்டுமெனக் கூறினார்கள்.

அவ்வாலிபரை கலீஃபா அவர்கள் நோக்க அவர் தன் குற்றத்தை மறுக்கவில்லை. எனினும் தாம் ஏன் அவ்வாறு செய்ய நேர்ந்தது என்பதற்கான காரணத்தை விளக்கினார். தான் தன் ஒட்டகங்களை மேய்த்து கொண்டிருந்த பொழுது அவைகளிலிருந்து ஒரு பெண் ஒட்டகம் தற்செயலாக அவரது தோட்டத்தில் நுழைந்துவிட்டது. உடனே அங்கிருந்த ஒரு முதியவர் அதனைக் கல்லால் எறியவே அது அடிப்பட்டு இறந்து விட்டது. பின்னர் நான் கோபத்தில் அதே கல்லை எடுத்து அவர் மீது எறியவே அதில் அவர் இறந்து போனார் எனக் கூறினார்.



அதற்கு கலீஃபா அவர்கள், உம் குற்றத்தை நீர் ஏற்றுக் கொள்வதால், உம்மை பழிக்கு பழி வாங்கப்படும் என்றார்கள்.

அதற்கவர், தங்களது தீர்ப்பிற்கு நான் வழிப்படுகிறேன். எனினும் என்னிடம் சில அமானித - நம்பிக்கைப் பொருள் கள் உள்ளன. அவைகளை உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு நாளை தங்கள் முன் ஆஜராகிறேன் எனக் கூறினார். அப்படியானால் நீர் நாளை வந்து சேர யார் பொறுப்பாளர் என கலீஃபா அவர்கள் வினவ, அவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு நாயகத்தோழர் அபூதர் (ரலி) அவர்களைக் காண்பித்தார். அவர்கள் அவருக்காக மூன்று தினங்கள் பிணையேற்றுக் கொண்டார்கள்.

மூன்று தினங்கள் கழிந்ததும் வேர்வை சொட்டச் சொட்ட அவ்வாலிபர் விரைந்து வந்தார். என் பொறுப்பில் இருந்த சிறு குழந்தையை அதன் மாமுமார்களிடம் ஒப்படைத்து அதன் சொத்துக்களுக்கு அவர்களைப் பொறுப்பாக்கி வைத்து விட்டு வந்துவிட்டேன் எனக் கூறினார்.

அவரது நேர்மையையும், வாய்மையையும் கண்ட, தந்தையை இழந்த அவ்விரு இளைஞர்களும் அவர் மீது இரக்கம் கொண்டு, "கலீஃபா அவர்களே! நாங்கள் இவ்வாலி பரை மன்னித்து விட்டோம். (அவரை விட்டுவிடுங்கள்) அவர் வாக்குறுதி காக்கும் வாய்மையாளராக உள்ளார்" என கூறினார்கள். அதுகேட்டு கூடியிருந்தோர் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். (அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

அரபு மக்கள், அறியாமைக் காலத்திலும் வாக்குறுதி காக்கும் மாண்புடையோராகத் திகழ்ந்து வந்தனர். கொடுத்த வாக்குக்கு மாறு செய்வதை இழிபண்பாகக் கருதி வந்தனர். நபியவர்களின் வருகைக்கு சற்று முன் வாழ்ந்த புகழ் பெற்ற அரபுக் கவிஞனான இம்ரவுல் கைஸின் தந்தை

ஹஜர்பின் ஹாரிஸ், நஜ்துப் பகுதியில் அஸத், ஹத்பான் கோத்திரத்தாரின் சிற்றரசராக விளங்கிவந்தார். அவரது எதிரிகளால் அவர் கொல்லப்பட்ட பின் இம்ரவுல் கைஸ், பல இடங்களில் சுற்றி அலைந்து, இறுதியில் ஸம்வால் பின் ஹரீம் என்பவரிடம் தஞ்சம் புகுந்தார். அவரும் அவருக்கு அபயமளித்தார். பின்னர் அவரிடம் தம் ஆயுதங்களை அமானிதமாக ஒப்படைத்துவிட்டு ரோமசச்சக்கரவர்த்தி கைசரை சந்திக்க சிரியா புறப்பட்டுச் சென்றார்.

நாட்கள் நகர்ந்தன. இம்ரவுல் கைஸ் மரணமடைந்தார். அதன்பின் சிரியாவின் குறுநில மன்னர்களிலொருவன் தம் தூதரை ஸம்வாலிடம் அனுப்பி, இம்ரவுல் கைஸின் ஆயுதங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டான். அதற்கு ஸம்வால் என் அமானிதத்தை அதற்குரியவரிடமே தவிர, வேறு யாரிடமும் தரமாட்டேன் எனக் கூறிவிட்டார்.

இதனைச்செவியுற்ற மன்னன் தம் படைகளுடன் ஸம்வாலைத் தாக்குவதற்காக வந்து, தீமா என்ற இடத்திலுள்ள அப்லக் எனும் ஸம்வாலின் கோட்டையை முற்றுகையிட்டான். கோட்டைக்கு வெளியே ஸம்வாலின் மகனை மன்னரின் படைகள் கைதியாகப் பிடித்துவிட்டனர். பிறகு மன்னர், ஸம்வாலை அழைத்து, “இதோ உம் மகன் கைதியாகப் பிடிக்கப்பட்டுவிட்டான். நீர் இம்ரவுல் கைஸின் ஆயுதங்களை எம்மிடம் ஒப்படைத்துவிட்டால், உம் மகனை உம்மிடமே ஒப்படைப்பேன். இல்லையெனில் உம் மகனை உம் கண்ணெதிரே கொன்றுவிடுவேன் என்றான்.

நீர் என் மகனைக் கொலை செய்தால் என்னிடம் அவனுக்கு பகரமாக வேறு மகன்கள் உள்ளார்கள். நீர் அவனைக் கொல்வதால் அவனுக்கு எத்தகு இழிவும் இல்லை. அவன் சங்கையாக வாழ்ந்து, சங்கையாக மரண மடைந்தான். எனினும் நான் இம்ரவுல் கைஸிற்கு கொடுத்த அறுதிமானத்தை முறிக்கும் பேச்சே இல்லை. அது என்றென்றும் இழிவாகும் என ஸம்வால் பதிலளித்தார்.



மன்னன் இதனைக் கேட்டுச் சினமுற்று, தான் கூறிய படியே ஸம்வாலின் மகனின் தலையை தன் வாளால் துண்டித்தான். அக்கோரக் காட்சியை ஸம்வாலும் பார்த்துக் கொண்டுதானிருந்தான். பின்னர் அவன் தன் படையுடன் அங்கிருந்து திரும்பிச் சென்றுவிட்டான்.

பின்னர் இம்ரவுல் கைஸின் வாரிசுகள் ஸம்வாலிடம் வந்தபொழுது, இம்ரவுல் கைஸின் ஆயுதங்களை அவர்களிடம் அவர் ஒப்படைத்தார்.

அமானிதம் காக்கும் அறப்பண்பிற்காக தம் செல்வப் புதல்வரையே அர்ப்பணித்த ஸம்வால், அமானிதப் பண்பின் உதாரண புருஷராகப் போற்றப்படுகிறார்.

**(அல் அரபு வஆதாபுஹூம், அல்இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

அமானிதம், (நம்பிக்கை காத்தல்) கொடுக்கல் - வாங்கல் களில் மட்டுமின்றி பேச்சுகளிலும் உள்ளது.

ஒருவர் மற்றொருவரிடம் அவர் வெளிப்படுத்த விரும்பாத பேச்சைக் கூறக் கேட்பாரானால், அப்பேச்சு அமானிதமாகும். அவர் அதனை மறைக்கும்படி அவரிடம் கூறா விட்டாலும் சரியே என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

**(அஹ்மது)**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மற்றொரு மணிமொழியில் ''மஜ்லிஸ்கள் (அவைகளில் ஆலோசிக்கப்படும் விஷயங்கள்) அமானிதத்தை கொண்டதாயிருக்கும் எனப் பகர்ந்துள்ளார்கள்.

**(அபூதாவூது)**

மேலும் இறைவணக்கங்களிலும் அமானிதம் உள்ளது. இப்னு மஸ்வூது (ரலி) கூறுகிறார்கள்: தொழுகை அமானிதமாகும். ஒலூ அமானிதமாகும் (அஹ்மது) ஒலூவையும் தொழுகையையும் பரிபூரணமாகவும், அழகாகவும் செய்வது அவைகளது அமானிதத்தை நிறைவேற்றுவதாகும்.

## தலைவர்களின் பொறுப்புகள்

அல்லாஹ்வின் நிழல் தவிர வேறு நிழல் இல்லாத

(கியாமத்) நாளில் நீதமிகு தலைவருக்கு அல்லாஹ் நிழல் வழங்குவான். (புகாரி, முஸ்லிம்)

நல்லுதவி செய்யப்பட்ட நீதமிகு தலைவர் சுவனவாசி என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

அன்னை ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்: கியாமத் நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் நிழலின் பக்கம் முந்திச் செல்பவர்கள் யார் என நீங்கள் அறிவீர்களா? எனத் தோழர்களிடம் அண்ணல் நபி (ஸல்) வினவினார்கள். அல்லாஹ்வும் அவன் தூதருமே நன்கறிந்தவர்கள் எனத் தோழர்கள் பதிலளித்தனர். அதற்கு நபியவர்கள், அவர்களது உரிமையை வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொண்டும், அவர்களிடம் உரிமையைக் கோரப்பட்டால் அதனை வழங்கியும், தங்களுக்கு ஆட்சி புரிவது (தன்னலம் பேணுவது) போன்றே மக்களுக்கு ஆட்சி புரிந்தார்களே அவர்களாவர் எனப் பகர்ந்தார்கள். (அஹ்மது)

தலைமைப் பொறுப்பேற்பவர் தமக்குக்கீழ் உள்ள மக்களிடம் அன்பு பாசம் செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.

அவ்ப் பின் மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் நவில நான் செவிமடுத்தேன். உங்கள் தலைவர்களில் சிறந்தவர்கள், நீங்கள் அவர்களை நேசித்தும், அவர்கள் உங்களை நேசித்தும், நீங்கள் அவர்களுக்காக நற்பிரார்த்தனை செய்தும், அவர்கள் உங்களுக்காக நற்பிரார்த்தனை செய்தும் வருகிறீர்களே அவர்களாவர். உங்கள் தலைவர்களில் தீயவர்கள், நீங்கள் அவர்களை வெறுத்தும், அவர்கள் உங்களை வெறுத்தும், நீங்கள் அவர்களை சபித்தும், அவர்கள் உங்களை சபித்தும் வருகிறீர்களே அவர்களாவர். அப்பொழுது அவர்களை (அவர்களுடனான எங்களது அறுதிமானத்தை) விட்டுவிடலாமா எனத் தோழர்கள் வினவினார்கள். அதற்கு நபியவர்கள், வேண்டாம்; அவர்கள்



உங்களிடையே தொழுகையை நிலைநாட்டி வரும்வரை என நபியவர்கள் இருமுறை கூறினார்கள். (முஸ்லிம்)

தலைமைப் பொறுப்பேற்பவர் மக்கள் நலம் பேணுபவராக இருத்தல் அவசியமாகும். "முஸ்லிம்களின் காரியங்களுக்காக பொறுப்பேற்றுக் கொண்ட தலைவர், பின்னர் அவர்களுக்காக பாடுபடாதவராகவும், அவர்களுக்கு நலம் நாடாதவராகவும் இருப்பாராயின் அவர், அவர்களுடன் சுவனில் நுழையமாட்டார் என மாநபி (ஸல்) கூறினார்கள். (முஸ்லிம்) மற்றொரு மணிமொழியில் "தலைவர் அவரது பிரஜைகள் மீது பொறுப்பாளர். அவரது பொறுப்பைப் பற்றி (அல்லாஹ்விடம்) அவர் வினவப்படுவார் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

தலைமைப் பொறுப்பேற்பவர் மக்களிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது அல்லாஹ்வும் அவருடன் மென்மையாக நடந்து கொள்வான்.

அன்னை ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்: நபியவர்கள் என் இல்லத்தில் பின்வருமாறு பிரார்த்தனை செய்தவர்களான நான் செவிமடுத்துள்ளேன்: இறைவா! என் உம்மத்தின் காரியங்களில் சிலதிற்கு பொறுப்பேற்று, பின்னர் அவர்களிடம் கடினமாகிவிட்டவர் மீது நீயும் கடினமாகுவாயாக! என் உம்மத்தின் காரியங்களில் சிலதிற்குப் பொறுப்பேற்று அவர்களிடம் மென்மையாக நடந்து கொண்டவர் மீது நீயும் மென்மை காட்டுவாயாக! (முஸ்லிம்)

அபூமூஸா (ரலி) மஆது பின் ஜபல் (ரலி) ஆகிய இரு தோழர்களையும் நபியவர்கள் எமன் நாட்டிற்கு (ஆட்சிப் பணிகளில்) நியமித்து அனுப்பி வைத்தார்கள். அப்பொழுது நபியவர்கள் அவ்விருவருக்கும் கூறினார்கள்: நீங்கள் இருவரும் (மக்களிடம்) மென்மையாக நடந்து கொள்ளுங்கள் (அவர்களிடம் கடினமாக நடந்து கொள்ளாதீர்கள்! அவர்களுக்கு நன்மாராயம் கூறுங்கள்! அவர்களை

வெறுப்பில் ஆழ்த்தாதீர்கள்! நீங்கள் இருவரும் ஒன்று பட்டிருங்கள்; வேறுபடாதீர்கள்! (புகாரி)

ஒரு நல்லாட்சியாளர்குரிய நற்பண்புகளை இம்மணி மொழியில் மாநபி (ஸல்) வழங்கியுள்ளார்கள்.

அபூபக்கர் (ரலி) ஒரு தடவை உமர் (ரலி) அவர்களிடம், கத்தாபின் மைந்தரே! முஸ்லிம்களுடன் நீங்கள் அன்பு, பரிவுடன் நடந்து கொள்வீர்கள் என்பதற்காக இப்பொறுப் பிற்கு உங்களைத் தேர்ந்தெடுத்துள்ளேன் எனப் பகர்ந்தார்கள். (கிதாபுல் கராஜ் - ஆதாபே ஜிந்தகி)

அதிகாரப் பொறுப்பில் இருப்பவர்கள் மக்கள் தேவை களை அறிந்து அவைகளை முனைந்து நிறைவேற்று பவர்களாக இருத்தல் அவசியமாகும்.

நபியவர்கள் நவின்றதாக அபூமர்யம் அல்அஜ்தி (ரலி) அறிவிக்கிறார்கள்: முஸ்லிம்களின் காரியங்களில் சில வற்றுக்கு அல்லாஹ் ஒருவரைப் பொறுப்பாக்கி வைத்து, அவர் முஸ்லிம்களின் தேவைகளின் பொழுதும், வறுமை யின் பொழுதும் அவர்களை விட்டு மறைந்து கொள்வாரா யின் (பொடுபோக்காக இருந்து கொள்வாராயின்) கியாமத் நாளில் அவரது தேவையின் பொழுதும், வறுமையின் பொழுதும் அல்லாஹ் அவருக்கு உதவாது தடுத்துக் கொள்வான். (அபூதாவூது)

அமீர் முஆவியா (ரலி) அவர்கள் மக்களின் தேவை களைக் கவனித்து நிறைவேற்றுவதற்காக ஓர் அதிகாரியை நியமனம் செய்திருந்தார்கள். (அபூதாவூது)

மற்றொரு மணிமொழியில், தேவையும் வறுமையுமுடைய மக்களிடம் தம் இல்லக்கதவைத் தாளிட்டுக் கொள்ளும் எத் தலைவருக்கும், அவரது தேவையும் வறுமையுமுள்ள நேரத்தில் வானின் கதவுகளை அல்லாஹ் தாளிட்டே தவிர வேறு இல்லை என மாநபி (ஸல்) கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அம்ரு பின் முர்ரா-திர்மிதி, அபூதாவூது)



இந்த ஹதீஸின் அடிப்படையில், தங்களைச் சந்தித்து முறையிட வரும் மக்களைத் தடுக்கும் விதத்தில் ஆட்சி யாளர்கள், தலைவர்கள், வாயிற்காவலரை ஏற்படுத்துவது கூடாது என இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறுகிறார்கள்.

(அஹ்காருல் ஆலமில், இஸ்லாமி)

தலைமை பொறுப்பிலுள்ளவர், நம்பிக்கை மிகு ஆலோசகர்களுடன் அவ்வப்பொழுது ஆலோசனைகள் கலந்து கொள்ள வேண்டும். "முஃமின்களின் காரியங்கள் அவர்களுக்கு மத்தியில் ஆலோசிக்கப்பட்டவையாகும்" என முஃமின்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் புகழ்ந்துரைக் கிறான். மேலும் குலபாயே ராஷிதீன்கள் தங்களது கிலாபத் பணிகளில் ஆலோசனைகள் கலந்து செயல்பட்டு வந்துள்ளார்கள்.

நல்லமைச்சர்களும், நல்லாலோசகர்களும் ஒரு தலை வருக்கு அமைவது அல்லாஹ்வின் அருட்கொடையாகும். நபியவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக் கிறார்கள்: அல்லாஹ் ஒரு தலைவருக்கு நலவை நாடி விட்டால், அவருக்கு நல்லமைச்சரை ஆக்குவான். தலைவர் மறந்துவிட்டால் அவர் நினைவுபடுத்துவார். அவர் கூறுவாரேயானால் (கட்டளையிட்டால்) அவருக்கு உதவுவார். (மாறாக) அவருக்கு நலவல்லாததை அல்லாஹ் நாடிவிட்டால், தீய அமைச்சரை ஆக்குவான். அவர் மறந்து விட்டால் அவர் ஞாபகப்படுத்தமாட்டார். அவர் கூறினால் அவருக்கு உதவமாட்டான். (அபூதாவூது)

தலைமைப் பொறுப்பேற்பவர் இறையச்சம், நீதி, நேர்மை, அறிவு ஞானம், நிர்வாகத்திறன், உயர்ந்த துணிச்சல், தியாகம் அர்ப்பணிப்பு, விரிந்த உள்ளம், மக்கள்நலம் பேணல், எளிமை போன்ற பல்வேறு குணநலன்களைக் கொண்டு விளங்குவது சீர்மிகு தலைமையின் சிறப்புமிகு பண்பு களாகும்.

ஆட்சிப் பொறுப்பாளர்கள் எளிமையான வாழ்க்கை

முறைகளை மேற்கொள்ள வேண்டுமென கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தங்கள் அதிகாரிகளுக்கு கட்டளை யிட்டிருந்தார்கள்.

இமாம் பைஹகீ (ரஹ்) தங்களது "ஷுஅபுல் ஈமான்" எனும் கிரந்தத்தில் அறிவிக்கிறார்கள்: உமர் (ரலி) அவர்கள், தங்கள் அதிகாரிகளை (பல்வேறு மாநிலங்களுக்கு) அனுப்பி வைக்கும்பொழுது "பிர்தவ்ன்" எனும் துருக்கி (உயர் ஜாதி) குதிரையில் அவர்கள் சவாரி செய்யலாகாது என்றும், பலமுறை அறைக்கப்பட்ட மென்மையான கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப்பண்டங்களை அவர் கள் சாப்பிடலாகாது என்றும், மெல்லிய ஆடைகளை அவர்கள் அணியலாகாது என்றும், மக்களின் தேவைகளின் பொழுது அவர்கள் தங்கள் இல்லக்கதவுகளை அடைத்து விடலாகாது என்றும் நிபந்தனையிடுவார்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் (என்) தண்டனை உங்களை அடையும் எனக் கூறுவார்கள். பின்னர் அவர்களை வழி அனுப்பி வைப்பார்கள். (மிஷ்காத்)

அதிகாரப் பொறுப்பை தாமே விரும்பித் தேடிப் பெறுவதும், அதனை ஆசைப்படுவதும் நன்றன்று.

அப்துர் ரஹ்மான் பின் ஸமுரா (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எனக்குச் சொன்னார்கள். அப்துர் ரஹ்மான் பின் ஸமுராவே! அதிகாரப் பொறுப்பை நீர் கேட்காதீர்! நீர் அதனைக் கேட்காமல், (உமக்கு அது) வழங்கப்படுமானால் அதன் மீது நீர் உதவியளிக்கப்படுவீர்! நீர் அதனைக் கேட்டுப் பெறுவீரேயானால் அதனளவில் நீர் (உதவியின்றி) விடப்பட்டுவிடுவீர். (புகாரி, முஸ்லிம்)

அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி) அறிவிக்கிறார்கள்: நானும், என் கோத்திரத்தைச் சார்ந்த வேறு இருவரும் அண்ணல் நபியவர்களின் சமுகத்திற்குச் சென்றோம் அவ்விருவரில் ஒருவர், "இறைத்தூதரே! அல்லாஹ் தங்களுக்கு வழங்கியுள்ள அதிகாரப் பொறுப்புகளில்



சிலவற்றுக்கு எங்களைப் பொறுப்பாளராக நியமியுங்கள் எனக் கேட்டார். மற்றவரும் அவ்வாறே கூறினார். அதற்கு அண்ணலார், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சமாக நாம் இப்பணிக்கு, அதனைக் கேட்பவரையோ, அல்லது அதனை ஆசைப்படுபவரையோ நியமிக்க மாட்டோம் எனப் பகர்ந்தார்கள். (புகாரி, முஸ்லிம்)

மக்களுக்கு நன்மைகளை எடுத்துச் சொல்லி, தீமைகளை விலக்கி வருவது தலைவர்களின் பொறுப்பாகும். அதனை அல்லாஹ் தனது அருள்மறையில் எடுத்தியம்புகிறான்.

"அவர்கள் (எத்தகையவர்களென்றால்) அவர்களுக்கு நாம் பூமியில் இடம்பாடாக்கிக் கொடுத்தால் (அதிகாரத்தை வழங்கினால்) அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள், ஜகாத் வழங்குவார்கள், நன்மையை ஏவுவார்கள், தீமையைத் தடுப்பார்கள்". (அல்குர்ஆன் 22-41)

தலைவர்களும், பொறுப்பாளர்களும் பைத்துல்மால் எனும் பொது நிதியை இறையச்சமுடனும், நீதமுடனும் நன்கு நிர்வகித்து வருவது அவசியமாகும். அவ்வாறில்லா விடின் இறைவனின் வேதனை அவர்களை அடையும். நபியவர்கள் நவின்றதாக கவ்லத்துல் அன்ஸாரிய்யா (ரலி) எனும் பெண்மணி அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் பொருளில் சிலர் முறையின்றி ஈடுபடுகின்றனர். அவர் களுக்கு கியாமத் நாளில் நரகமுண்டு. (புகாரி)

அபூதர் (ரலி) கூறுகிறார்கள்: இறைத்தூதரே! எமக்கு ஏதாவது அதிகாரப் பொறுப்புகள் வழங்கக்கூடாதா! என நான் நபியவர்களிடம் கேட்டேன். அதனைக் கேட்டு நபியவர்கள் என் தோள்புயத்தில் தங்கள் கரத்தால் அடித்து விட்டுக் கூறினார்கள்: அபூதர்ரே! நீர் பலவீனமானவர். அப் பதவியோ அமானிதமாகும். அதனை அதன் உரிமையைக் (தகுதியைக்) கொண்டு பெற்று அதில் தம் பொறுப்பை (செவ்வனே) நிறைவேற்றினாரோ அவரைத் தவிர (மற்றவர் களுக்கு) அது கியாமத் நாளில் கேவலமும், கைசேதமுமாகும் எனப் பகர்ந்தார்கள். (முஸ்லிம்)

தலைமைப் பொறுப்பிற்கு தகுதியுடையவரை தேர்ந் தெடுப்பது தீனின் பொறுப்புகளில் ஒன்றாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர் தம் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றுவது, அதன் அமானிதத்தை நிறைவேற்று வதாகும்.

மக்கள் தங்களுக்கு தலைமை தாங்கும் தலைவர்களுக்கு வழிப்பட்டு வாழ்வதும்; அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கி வருவதும் அவசியமாகும்.

அல்லாஹ் தன் அருள்மறை திருக்குர்ஆனில், "அல்லாஹ் வுக்கும், அவன் தூதருக்கும், உங்களில் நின்றுமுண்டான தலைவர்களுக்கும் வழிப்படுங்கள்!" எனக் கூறுகிறான்.

நீதமிகு ஆட்சித்தலைவருக்கு நன்றி செலுத்துவது மக்கள் கடமையாகும். அரசாளுபவர் நீதி செலுத்தினால், அவருக்கு நற்கூலி உண்டு. அவருக்கு நன்றி செலுத்துவது மக்கள் மீதுள்ளது என நபியவர்கள் ஒரு ஹதீஸில் கூறியுள்ளார்கள்.

(பைஹகி)

கலீஃபா உமர் (ரலி) அவர்கள், ஒருமுறை மக்களுக்கு உரையாற்றும்பொழுது, "மக்களே! எங்கள் முன்னிலையில் இல்லாதபொழுதும் எங்களுக்கு தூய்மையான எண்ணத் துடன் நன்மையை நாடுங்கள். மேலும் நல்ல விஷயங்களில் எங்களுக்கு உதவி வாருங்கள் எனக் குறிப்பிட்டார்கள்.

(ஆதாபே ஜின்தகி)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: அமீருக்கு (தலைவருக்கு) வழிப்பட்டவர் எமக்கு வழிப்பட்டுவிட்டார். அவருக்கு மாறு செய்தவர் எமக்கு மாறு செய்துவிட்டார்.

(புகாரி, முஸ்லிம்)

தலைவர் பாவத்தைக்கொண்டு ஏவினால் அதற்கு வழிப் படுதல் கூடாது. நபியவர்கள் நவின்றதாக அலி (ரலி) கூறு கிறார்கள்: பாவத்தில் வழிப்படுதல் கிடையாது வழிப்படுவ தெல்லாம் நன்மையில்தான்.

(புகாரி, முஸ்லிம்)



நபியவர்கள் நவின்றதாக நவாஸ் பின் ஸம்ஆன் (ரலி) அறிவிக்கிறார்கள்: படைத்தவனுக்கு மாறு செய்யும் விஷயத் தில் படைக்கப்பட்டவருக்கு வழிப்படுதல் கிடையாது.

(ஷரஹுஸ் ஸுன்னா)

## நீதி வழங்குதல்

நீங்கள் மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினால், நீத மாகத் தீர்ப்பு வழங்கவேண்டுமென அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான்.

(அல்குர்ஆன் 58)

உங்களுக்கு மத்தியில் நான் நீதம் செய்ய வேண்டுமென ஏவப்பட்டுள்ளேன்.

(அல்குர்ஆன் 42-15)

நீங்கள் நீதம் செலுத்துங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானதாகும்.

(அல்குர்ஆன் 5-8)

கியாமத் நாளில் மக்களில் அந்தஸ்தில் மிக உயர்ந்தவர் நீதம் செலுத்தும் தலைவராவார் என நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

(அபூயஃலா)

மற்றொரு மணிமொழியில், "தங்கள் தீர்ப்பிலும், தங்களது குடும்பத்தாரிலும், தாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டவைகளிலும் நீதம் செலுத்தியவர்கள், அல்லாஹ் விடம் ஒளியிலான மேடைகளில் இருப்பார்கள் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

(முஸ்லிம்)

இந்நபிமொழியில், நீதிபதிகள், குடும்பத்தலைவர்கள், பொறுப்பாளர்கள் தங்கள் பணிகளில் நீதம் செலுத்தி வருவதன் மூலம் மேற்காணும் உயர் அந்தஸ்தைப் பெறுவர் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், மஆது பின் ஜபல் (ரலி) அவர் களை எமன் நாட்டிற்கு ஆளுநராக நியமனம் செய்து அனுப்பிவைத்தபொழுது, தீர்ப்பளிக்கும் கட்டம் வந்தால் நீர் எதை வைத்துத் தீர்ப்பு வழங்குவீர் என அவரிடம் வின வினார்கள். அதற்கவர், அல்லாஹ்வின் திருவேதம் கொண்டு

தீர்ப்பு செய்வேன் எனக் கூறினார். அதில் (நேரடியாக) நீர் பெற்றுக் கொள்ளாவிடின் (என்ன செய்வீர்) என வினவினார்கள். அதற்கவர், அப்பொழுது அல்லாஹ்வின் திருத் தூதரின் வழிமுறை கொண்டு தீர்ப்பு செய்வேன் என்றார். அதிலும் நீர் பெற்றுக் கொள்ளாவிடின் (என்ன செய்வீர்) என வினவினார்கள். அதற்கவர் அப்பொழுது என் அபிப்ராயத்தை தண்டிப்புச் செய்து அறிவேன். அதில் குறைபாடு செய்யமாட்டேன் என்றார். இதனைக் கேட்டதும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவரது நெஞ்சில் தட்டிக் கொடுத்து, “அல்லாஹ்வின் தூதரின் தூதருக்கு, அல்லாஹ்வின் தூதர் பொருந்திக் கொள்ளும் விடையை அளிக்கப் பேருதவி செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் எனப் பகர்ந்தார்கள். (திர்மிதி, அபூதாவூது, தாரமி)

நபியவர்கள் நவின்றதாக புரைதா (ரலி) அறிவிக்கிறார்கள்: நீதிபதிகள் மூன்று வகையினராவர். ஒருவர் சுவனத்தில் இருக்கிறார். மற்ற இருவர் நரகத்தில் இருக்கிறார்கள். சுவனத்தில் இருப்பவர், வழக்கின் உண்மையை அறிந்து தீர்ப்பு வழங்கியவராவார். நரகிலுள்ள இருவரில் ஒருவர், உண்மையை விளங்கிக்கொண்டு, வேண்டுமென்றே தீர்ப்பில் அநீதி செய்தவர், நரகில் உள்ள மற்றொருவர், உண்மையை (சரிவர) அறியாமல் தீர்ப்பு வழங்கியராவார். (அபூதாவூது, இப்னுமாஜா)

வழக்கின் தன்மைகளையும், சூழ்நிலைகளையும் நன்கு தீர விசாரித்தறிந்து தீர்ப்புச் செய்ய வேண்டும் என்பதை மேற்காணும் நபிமொழி வலியுறுத்துகிறது.

நீதிபதி தீர்ப்பு வழங்கும்பொழுது இயல்பான நிலையில் நிம்மதியாக இருந்து தீர்ப்பு வழங்கவேண்டும். கோபமான நிலையிலோ, உணர்ச்சிவசப்பட்ட நிலையிலோ தீர்ப்பு வழங்குதல் கூடாது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவில தான் செவி மடுத்ததாக அபூபக்கர் (ரலி) அறிவிக்கிறார்கள்: கோபமாக



இருக்கும் நிலையில், நீதிபதி இருவருக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கமாட்டார். (புகாரி, முஸ்லிம்)

வழக்கில் வாதி, பிரதிவாதி ஆகிய இருவரின் வாதங்களையும் நீதிபதி நன்கு கேட்டறிந்து பின்னர் தீர்ப்பு வழங்குவார்.

அலி (ரலி) கூறுகிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எமன் நாட்டிற்கு என்னை நீதிபதியாக நியமனம் செய்து அனுப்பிவைத்தார்கள். அப்பொழுது, நான் அல்லாஹ்வின் திருத்தூதரே! இளம் வயதினனாகவும், தீர்ப்பு ஞானம் இல்லாதவனாகவுமுள்ள என்னை (இம்மாபெரும் பொறுப்பிற்கு) அனுப்பி வைக்கிறீர்களே! எனக் கூறினேன். அதற்கவர்கள், நிச்சயமாக அல்லாஹ் உம் உள்ளத்திற்கு நேர்வழி காட்டுவான். உம் நாவைத் தறிபடுத்தி வைப்பான். உம்மிடம் இருவர் வழக்காடி வந்தால், இரண்டாமவரின் பேச்சைக் கேட்குமுன், முதலாமவருக்கு தீர்ப்பளித்து விடாதீர்! நிச்சயமாக அது உமக்கு தீர்ப்பு தெளிவாகுவதற்கு பொருத்தமானதாகும் எனப் பகர்ந்தார்கள். அலி (ரலி) கூறுகிறார்கள்: இதன் பின்னர் எனக்கு எத்தீர்ப்பிலும் சந்தேகம் ஏற்படவில்லை. (திர்மிதி, அபூதாவூது, இப்னுமாஜா)

அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அறிவிக்கிறார்கள்: தீர்ப்பளிப்பவர் முன், வழக்காடுபவர்கள் இருவரும் அமர வைக்கப்பட வேண்டுமென நபியவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். (அஹ்மது, அபூதாவூது)

நீதமாக தீர்ப்பு வழங்கும் நீதிபதிக்கு அல்லாஹ்வின் உதவி கிடைக்கிறது. நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அபீ அவ்பா (ரலி) அறிவிக்கிறார்கள்: நீதிபதி அநியாயமாகத் தீர்ப்பு வழங்காத காலமெல்லாம் அல்லாஹ் அவருடனிருப்பான். அவர் அநியாயமாகத் தீர்ப்பு வழங்கினால் அல்லாஹ் அவரை விட்டுவிடுவான். ஷைத்தான் அவரைப் பற்றிப் பிடித்துக்கொள்வான். (திர்மிதி, இப்னுமாஜா)

ஸயீது பின் முஸய்யிப் (ரலி) அறிவிக்கிறார்கள்: உமர் (ரலி) அவர்களிடம், ஒரு முஸ்லிமும், ஒரு யூதரும் வழக்காடி வந்தனர். அவ்விருவரில், யூதரின் பக்கம் நீதி இருப்பதை உமர் (ரலி) பார்த்தார்கள். ஆகவே அவருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கினார்கள். அப்பொழுது யூதர் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் சத்தியத்தை கொண்டு தீர்ப்பளித்துவிட்டீர். (மாலிக்)

நீதிபதி பதவியைத் தானாக விரும்பித் தேடிப்பெறுவது நன்றன்று. எனினும் அவரைத் தேடி அது வழங்கப் பெறும் பொழுது அப்பணியில் அல்லாஹ் அவருக்கு உதவுவான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: யார் நீதிபதி பதவியைத் தேடிப்பெறு கிறாரோ, அது அவரளவில் விடப்பட்டுவிடும். யாருக்கு அது வற்புறுத்தி வழங்கப்படுகிறதோ அவருக்கு உதவுவதற்கு ஒரு வானவரை அல்லாஹ் அனுப்பி வைப்பான்.

(திர்மிதி, அபூதாவூது, இப்னுமாஜா)

உண்மையில் நீதி வழங்கும் பொறுப்பு மிகப் பளு வானதும், சிரமமானதுமாகும். நீதித் தராசின் நுட்பமான முனை இங்குமங்கும் சாய்ந்துவிடாமல் பாதுகாக்க வேண் டிய பெரும் பொறுப்பு அவர் மீது வருகிறது. உரிமைகளை உரியவர்களைக் கண்டறிந்து வழங்க வேண்டியுள்ளது. ஆகவே சில பெரியார்கள் பேணுதலைக் கருதி அப் பொறுப்பை ஏற்க மறுத்துள்ளார்கள்.

கலீஃபா உத்மான் (ரலி) அவர்கள் ஒரு முறை உமர் (ரலி) அவர் களின் புதல்வரும் பிரபல நாயகத் தோழருமான அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம், நீதிபதி பதவியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற்கவர்கள், "அமீருல் முஃமினீன் அவர்களே! என் மீது இரக்கப்படக் கூடாதா! எனக் கூறினார்கள். பின்னர் அவர்கள் அப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். (திர்மிதி)



அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: கியாமத் நாளில் நீதிபதி யிடம் நீதி வரும். (அப்பொழுது) பழங்கள் (போன்ற சிறு பொருள்கள்) விஷயத்தில் கூட இருவருக்கு மத்தியில்தான் தீர்ப்பளித்திருக்கக் கூடாது என அவர் எண்ணுவார்.

(அஹ்மது)

தனக்கு உரிமையில்லாத பொருளை தமக்குரியது என வாதிடுபவர் நரகவாசியாவார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூதர் (ரலி) அறிவிக்கிறார்கள்: யார் தமக்கு உரிமையில்லாத பொருளை, தமக்குரியது என வாதிடுகிறாரோ அவர், நம்மைச் சேர்ந்தவரல்லர். அவர் தம் இருப்பிடத்தை நரகில் தேடிக்கொள்ளட்டும். (முஸ்லிம்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஷுஐப் தம் பாட்டனார் அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் (ரலி) வாயிலாக அறிவிக்கிறார்: தெளிவான ஆதாரங்களைக் கொண்டுவருவது வாதியின் மீது உள்ளது. (அதற்கு அவரால் இயலவில்லையென்றால் அதனை மறுக்கும்) பிரதி வாதியின் மீது சத்தியம் செய்வது உள்ளது. (திர்மிதி)

இஸ்லாமிய நீதித்துறையின் அடிப்படை வழிகாட்டும் நெறிமுறையாக இந்நபிமொழி திகழ்கிறது.

ஒரு வாதி தம் வாதத்திற்கு தெளிவான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு அவரால் இயலாவிடின், அவரது வாதத்தை மறுத்துரைக்கும் பிரதிவாதியிடம், அவரது மறுப்பின் மீது அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யுமாறு நீதிபதி கோருவார். அதற்கு அவர் மறுப் பாரேயானால், வாதியின் வாதத்தில் உண்மை உள்ளதாக நீதிபதி கருதுவார்.

அல்கமா பின் வாயில் (ரலி) அறிவிக்கிறார்கள்: (எமன் நாட்டிலுள்ள) ஹள்ரமௌத் எனும் நகரத்தைச் சேர்ந்த ஒருவரும், (எமன் நாட்டில் வசிக்கும்) கிந்தா எனும்

கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமுகம் வந்தார்கள்: ஹள்ரமௌத்தைச் சேர்ந்த வர், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வின் திருத்தூதரே! இவர் என் நிலத்தின் மீது ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் எனக் கூறினார். அதற்கு கிந்தா கோத்திரத் தைச் சேர்ந்தவர், "அது என் நிலம்தான்; அது என் கைவசத் தில்தான் உள்ளது. அதில் அவருக்கு எத்தகு உரிமையு மில்லை" எனக் கூறினார்.

அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், (வாதி யான) ஹள்ரமௌத்தைச் சேர்ந்தவரிடம் உமக்கு ஆதாரம் உண்டா? என வினவினார்கள். அதற்கவர் "இல்லை" எனக் கூறினார். அப்படியானால் (உமது பிரதிவாதியான) கிந்தாக் காரர் (நிலம் உம்முடையதன்று; தன்னுடையதுதான் என்று) அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்வது மட்டுமே உள்ளது என நபியவர்கள் பகர்ந்தார்கள். அதற்கவர் "அல்லாஹ்வின் திருத்தூதரே! அவர் பாவியானவர். சத்தியம் செய்வது பற்றி பொருட்படுத்தமாட்டார். எவ்விஷயத்திலும் பேணுதல் உள்ளவரல்லர் எனக் கூறினர். அதற்கு அண்ண லார், (உமக்கு ஆதாரம் இல்லாமலிருப்பதால்) அவரிட மிருந்து இது தவிர வேறு வழி உமக்கு இல்லை எனப் பகர்ந்தார்கள். பின்னர் (பிரதிவாதியான) கிந்தாக்காரர் சத்தியம் செய்ய ஆயத்தமானார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "அவரை ஹள்ரமௌத்தைச் சேர்ந்த வரின் சொத்தை அநியாயமாக உண்ணுவதற்காக சத்தியம் செய்வாராயின், ''மறுமையில் அல்லாஹ் அவரைப் புறக்கணித்தவனாகவே சந்திப்பார் எனப் பகர்ந்தார்கள்.

**(முஸ்லிம்)**

"தம் சத்தியம் மூலம் பிற முஸ்லிமின் உரிமையைப் பறித்துச் செல்பவர் மீது அல்லாஹ் நரகைக் கடமையாக்கி, சுவனத்தை விலக்கி வைத்துள்ளான்" என ஒருமுறை மாநபி (ஸல்) பகர்ந்தார்கள். அப்பொழுது ஒரு தோழர் அல்லாஹ் வின் திருத்தூதரே! அதிகமான பொருள்கள் விஷயத்திலா?



என வினவினார். அதற்கவர்கள், அராக் (மிஸ்வாக்) மரத்தின் ஒரு குச்சியின் விஷயத்திலானாலும் சரியே எனப் பகர்ந்தார்கள்.

**(முஸ்லிம்)**

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: இறைவனுக்கு இணை வைப்பதும், பெற்றோரை வேதனைப்படுத்துவதும், பொய்ச் சத்தியம் செய்வதும் பாவங்களில் மாபெரும் பாவங்களாகும். ஒருவர் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்து, ஒரு ஈயின் இறக்கையின் அளவு பொய்யை அதில் நுழைய வைப்பாரா யின் கியாமத் நாள் வரை அவரது உள்ளத்தில் ஒரு கரும்புள்ளியை ஆக்கப்படும்.

**(திர்மிதி)**

பொய்ச் சான்று பகருவது மாபெரும் பாவமாகும். ஹரீம் பின் பாதிக் (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை வைகறைத் தொழுகையை தொழ வைத்துத் திரும்பியதும் எழுந்து நின்று, பொய்ச்சாட்சி கூறுவது, இறைவனுக்கு இணைவைக்கும் பாவத்திற்கு ஈடாகிவிட்டது என மும்முறை கூறினார்கள்.

**(அபூதாவூது, இப்னுமாஜா)**

நபியவர்கள் நவின்றதாக ஷுஐப் தம் பாட்டனார் அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் (ரலி) வாயிலாக அறிவிக்கிறார்: மோசடி செய்யும் ஆண், மோசடி செய்யும் பெண், விபச்சாரம் புரியும் ஆண், விபச்சாரம் புரியும் பெண், தம் சகோதரி மீது கெட்ட எண்ணமும் விரோதமும் கொண்டவர் ஆகியோரின் சாட்சிகள் ஆகுமாகாது. (ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) மேலும் ஒரு குடும்பத்தாருக்காக அவர்களிடம் பணிபுரிபவரின் சாட்சியத்தை ஏற்க, நபியவர்கள் மறுத்துவிட்டார்கள்!

**(அபூதாவூது)**

அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கிறார்கள்: லஞ்சம் கொடுப்பவரையும், லஞ்சம் வாங்குபவரையும் அண்ணல் நபி (ஸல்) சபித்துள்ளார்கள்.

**(அபூதாவூது, இப்னுமாஜா)**

## பலவீனமானவர்களுக்கு உதவுதல்

ஏழை எளிய மக்கள், அனாதைகள், விதவைகள், வழிப் போக்கர்கள், உடல் நலிவுற்றோர் போன்ற பலவீனமான மக்களுக்கு உதவுவதை இஸ்லாம் மிக வலியுறுத்துகிறது.

பலவீனமான மக்களுக்குத் தேவையான உதவிகளைப் பலம் பொருந்தியவர் செய்யும்பொழுது அல்லாஹ் மகிழ் வடைகிறான். அம்மக்களும் மனமகிழ்வுடன் அவர்களுக்காக பிரார்த்தனை செய்வர்.

பலவீனமான மக்களின் இரணங்களையும் சேர்த்து பலமுள்ளவர்களின் கரங்களில் அல்லாஹ் வழங்குகிறான். "நீங்கள் இரணம் அளிக்கப்படுவதெல்லாம், உங்களது பலவீனமானவர்களின் காரணமாகத்தான்" என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி)

ஆகவே பலவீனமானவர்களை வெறுப்பதோ, அவர்களை விரட்டுவதோ சரியன்று. தன்னுடைய இரணத்தைக் குறைத்துக்கொண்டு அதனை அவர்களுக்கு கொடுப்பதாக எண்ணக்கூடாது.

உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர் களுக்கும் அவர்களது பாத்தியதைகளை வழங்குவீராக! என அல்லாஹ் தன் அருள்மறையில் கூறுகிறான்.

(அல்குர்ஆன் 30:39)

ஏழை எளிய மக்கள், சுவனத்தில் அதிகமாக உள்ளார் கள். நபியவர்கள் நவின்றதாக உஸாமா பின் ஜைது (ரலி) அறிவிக்கிறார்கள்: சுவனத்தின் வாயிலில் நான் நின்றேன். அப்பொழுது அதில் நுழைந்துள்ளவர்களில் அதிகமானோர் ஏழை எளிய மக்களாவர். (புகாரி, முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக அபூஸயீதில் குத்ரி (ரலி) அறிவிக்கிறார்கள்: சுவனமும் நரகமும் ஒருமுறை உரை யாடியது. நரகம் கூறியது. என்னில் அட்டூழிக்காரர்களும்,



தற்பெருமை அடித்தவர்களுமுள்ளனர். சுவர்க்கம் கூறியது: என்னில் பலவீனமானவர்ளும் ஏழை எளிய மக்களும் உள்ளனர். (முஸ்லிம்)

அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்வார்கள்: இறைவா! என்னை ஏழையாக வாழச் செய்வாயாக! என்னை ஏழையாக மரணிக்கச் செய்வாயாக! என்னை ஏழைகளின் அணியில் எழுப்புவாயாக! (திர்மிதி)

அன்னை ஆயிஷாவுக்கு நபியவர்கள் கூறினார்கள்: ஆயிஷாவே! ஏழைகளை விரட்டாதே! பேரீத்த பழத்துண் டைக் கொண்டாகிலும் சரியே. ஆயிஷாவே ஏழைகளை நேசிப்பாயாக! அவர்களை சமீபமாக்கிக் கொள்வாயாக! (அவர்களை ஆதரிப்பாயாக! நிச்சயமாக அல்லாஹ் கியாமத் நாளில் உம்மை சமீபமாக்கிக் கொள்வான். (திர்மிதி)

உமய்யா பின் காலித் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர் கள் ஏதாவது (பங்கிட்டு வழங்க) ஆரம்பித்தால், முஹாஜிர் களில் ஏழை மக்களைக் கொண்டு ஆரம்பிப்பார்கள்.

(ஷரஹுல் ஸுன்னா)

அபூதர் (ரலி) கூறுகிறார்கள்: என் நேசர் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஏழு விஷயங்களைக் கொண்டு ஏவினார் கள்: நான் ஏழைகளை நேசித்து அவர்களுடன் நெருங்கி இருக்க வேண்டுமெனவும், உலகின் விஷயத்தில் என்னை விட கீழ் உள்ளவர்களை பார்க்க வேண்டுமெனவும் எனக்கு மேலுள்ளவர்களை நான் பார்க்கக்கூடாது எனவும், உற்றாரை அவர்கள் புறக்கணித்தபொழுதும் நான் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனவும், நான் யாரிடத்திலும் எந்தப் பொருளையும் கேட்கலாகாது எனவும், கசப்பாக இருந்த போதிலும் நான் உண்மையே பேசவேண்டுமெனவும், அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்புக்கு நான் அஞ்சக்கூடாது என்றும், நான் "லாஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாஹி" என்ற சொல்லை அதிகம்

கூறிவரவேண்டும் என்றும் எனக்கு ஏவினார்கள். இவை அர்ஷுக்கு கீழுள்ள புதையல்களாகும் எனக் கூறினார்கள்.

(அஹ்மது)

நபியவர்களின் பெரிய தந்தை அபூதாலிப் அவர்களின் மகனார் ஜஃபர் (ரலி) ஏழை எளிய மக்களை மிகவும் நேசித்து வரக்கூடியவர்களாக இருந்தார்கள்.

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: ஜஃபர் (ரலி) அவர்கள் ஏழை எளிய மக்களை நேசிப்பவர்களாக இருந் தார்கள். அவர்களுடன் அமர்ந்திருப்பார்கள். அவர்களுடன் உரையாடுவார்கள். ஏழை மக்கள் அவருடன் உரையாடு வார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு 'அபுல் மஸாகீன்' "ஏழை மக்களின் தந்தை" என சிறப்புப் பெயர் சூட்டினார்கள்.

(திர்மிதி)

நபியவர்கள் நவின்றதாக இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அறிவிக்கிறார்கள்: நிச்சயமாக அல்லாஹ், குடும்பத்தை யுடைய பேணுதலான, முஃமினான, தன் ஏழை அடிமையை நேசிக்கிறான்.

(இப்னுமாஜா)

ஏழை எளிய மக்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிக நேசிப்பவர்களாக இருந்தார்கள். அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) கூறுகிறார்கள்: நான் மஸ்ஜிதில் அமர்ந்து இருந்தபொழுது, ஏழை முஹாஜிர்களின் அணியொன்றும் அங்கு அமர்ந்திருந்தது. அப்பொழுது நபியவர்கள் அங்கு வந்து அவர்களை முன்னோக்கி அமர்ந்து கொண்டார்கள். நான் எழுந்து நின்று கொண்டேன் அப்பொழுது நபியவர் கள் கூறினார்கள்: ஏழை முஹாஜிர்கள், செல்வந்தர்களுக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் சுவனம் செல்வார்கள் எனும் அவர்கள் மகிழ்வடையும் நன்மாராயத்தைப் பெற்றுக் கொள்வார்களாக! எனப் பகர்ந்தார்கள். அறிவிப்பாளரான நாயகத் தோழர் அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) கூறுகிறார்: நானும் அவர்களில் ஒருவராக இருக்க ஆசைப்பட்டேன்.

(தாரமீ)



அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கும் அருட்கொடைகளை குறைவாக மதிப்பிட்டு தர்மம் செய்வதிலிருந்து நாம் பின் வாங்கி விடக்கூடாது. அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளவை களிலிருந்து இயன்றளவு வழங்கி அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியார்களாக நாம் திகழவேண்டும்.

நபியவர்கள் நவின்றதாக ஷுஐப் பின் முஹம்மது தம் பாட்டனார் அப்துல்லாஹ் பின் அம்ரிப்னில் ஆஸ் (ரலி) வாயிலாக அறிவிக்கிறார்: இரு பண்புகள் எவரில் இடம் பெறுகிறதோ அவரை பொறுமை செலுத்தும் நன்றி யாளராக அல்லாஹ் ஆக்குகிறான். யார் தீனின் விஷயத்தில் தன்னைவிட மேல் உள்ளவர்களைப் பார்த்து அவர்களைப் பின்பற்றியும், உலகின் விஷயத்தில் தன்னைவிட கீழ் உள்ளவர்களைப் பார்த்து, அல்லாஹ் தனக்குச் செய்துள்ள அருட்கொடைக்காக அல்லாஹ்வை புகழ்ந்தும் வருகிறாரோ அவரை அல்லாஹ் பொறுமையாளரான நன்றி செய்பவராக எழுதுவான். தீனின் விஷயத்தில் தன்னை விட கீழ் உள்ளவர்களின் பக்கம் பார்த்தும், உலக விஷயத் திலும் தன்னைவிட மேல் உள்ளவர்களைப் பார்த்து ஏங்கும் மனிதனை நன்றி செய்யும் பொறுமையாளராக அல்லாஹ் எழுதமாட்டான்.

(திர்மிதி)

திருமணத்திற்குப் பிறகு நடைபெறும் வலீமா விருந்திற்கு ஏழை எளிய மக்களும் அழைக்கப்படவேண்டுமென அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வழிகாட்டுகிறார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: செல்வந்தர்களை மட்டும் அழைக்கப்பட்டு, ஏழைகளை விடப்பட்டு விடும் வலீமா விருந்தின் உணவு கெட்டதாகிவிட்டது. (இறை யருளைவிட்டும் நீங்கியது)

(புகாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வின் பாதையில் ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்கும் பண்பு இந்த உம்மத்தின் சிறப்புப் பண்பாக விளங்குகிறது. இந்த உம்மத்தின் ஆரம்ப அணியினரான

சஹாபாக்கள் முதல் இன்றைய சமுதாயம் வரை தலைமுறை தலைமுறையாக இம்மாண்புமிகு பண்பு இந்த உம்மத்தில் இலங்கி வருகிறது. அதற்கு ஆயிரமாயிரம் சான்றுகள் மிளிர்ந்து கொண்டுள்ளன.

அன்னை ஆயிஷா (ரலி) ஒரு முறை ஒரு லட்சம் திர்ஹம் களை தர்மம் வழங்கினார்கள். அப்பொழுது அவர்கள் பழைய ஆடையே அணிந்திருந்தார்கள். மேலும் நோன்பாளி யாக இருந்தார்கள். அப்பொழுது அவர்களது பணிப்பெண், நீங்கள் நோன்பு திறப்பதற்காக ஏதும் பண்டங்கள் வாங்கு வதற்கு சில திர்ஹம்களை மீதமாக விட்டு வைத்திருக் கலாமே என்றார்: அதற்கவர்கள் முன்னரே நீ ஞாபகப் படுத்தியிருந்தால் அவ்விதம் செய்திருப்பேன் எனப் பகர்ந்தார்கள். (ஹாகிம்-அல் அர்கானுல் அர்பஆ)

ஒரு லட்சம் திர்ஹம்கள் ஏழை எளியோருக்கு தர்மம் வழங்கிய அவர்கள் தங்களை மறந்துவிட்டார்கள். மக்களை நினைத்தார்கள்.

ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் இறைநேசச் செல்வர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் வரலாறும், தயாளத்தன்மையும் கொடைத் தன்மையும் நிறைந்ததாக விளங்குகிறது. முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: என் கரம் ஓட்டைக்கரமாகும். எதையும் தடுத்துவைக்காது என்னிடம் ஒரு நாளில் ஆயிரம் பொற்காசுகள் வந்தாலும் அது என்னிடம் ஓர் இரவும் தங்குவதில்லை. மற்றொரு முறை அவர்கள் கூறினார்கள். உலகம் எம் கரத்திலிருந்தால், அவையனைத்தையும் பசித்தோருக்கு செலவளிக்க ஆசைப்படுகிறேன்.

(கலாயிது ஜவாஹிர் - அல் அர்கானுல் அர்பஆ)

ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில் டில்லி மாநகரில் வாழ்ந்த மாபெரும் இறைநேசச் செல்வர் ஷைகு நிஜாமுத்தீன் (ரஹ்) அவர்களது கொடைத்தன்மையையும்



வரலாறு எடுத்தியம்புகிறது. ஏழை எளிய மக்களைப் பற்றிய கவலையும் அக்கறையும் அவர்களிடம் எப்பொழுது மிருந்தது என்று அவர்களது பணியாளர் கூறுகிறார்: நான் அவர்களிடம் பல்வேறு உயர்ந்த அறுசுவை உணவுகளை அவர்கள் சஹர் செய்வதற்காக கொண்டு போய் வைத்து விட்டு வருவேன். அவர்கள் அவைகளில் ஒரு சில கவளங் களைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வார்கள். சில நாட் களில் அதனை எடுக்கவே மாட்டார்கள். பின்னர் நோன்பு திறக்கும் பொழுதும் சொற்பமானதைக் கொண்டு போது மாக்கிக் கொள்வார்கள்.

ஒரு நாள் நான் அவர்களிடம் இச்சொற்ப உணவைக் கொண்டு எவ்வாறு தங்கள் உடல் நலத்தை பாதுகாக்கி றீர்கள் எனக் கேட்டேன். அதனைக் கேட்டதும், கண்ணீர் உகுந்தவர்களாகக் கூறினார்கள்: எத்தனையோ ஏழை எளிய மக்கள், வழிப்போக்கர்கள், பள்ளிவாயில்களிலும், சாலை களிலும் பசியால் வாடிக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு ஒரு கவளம் உணவு கூட உண்ணக் கிடைக்காத நிலையில் உள்ளபொழுது நான் எவ்வாறு இவ்வறுசுவை உணவுகளை உண்ணுவேன்.

அவர்களது மரணத்திற்கு சற்றுமுன் அவர்களது தவச்சாலையில் இருந்த உணவுப் பொருள்களை ஏற்கனவே தர்மம் செய்தது போக, அங்கு தங்கியுள்ளவர்கள் சில தினங்கள் உண்ணுவதற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த உணவுத் தானியங்களையும் உடனடியாக சதகா செய்து விடவேண்டும் எனப் பணித்தார்கள். எனக்காக ஏழை எளிய மக்களை அழையுங்கள் என்றார்கள். அவர்கள் கூடியதும், இத்தானியங்களை எடுத்துச் செல்லுங்கள் என்றார்கள். அவர்கள் அவைகளை விரைந்து அள்ளிச் சென்றதும் அவ் விடத்தை கூட்டிச் சுத்தப்படுத்தும்படி உத்தரவிட்டார்கள்.

(அல் அர்கானுல் அர்பஆ)

ஹிஜ்ரி 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த மகான் சையத்

முஹம்மது ஸயீது அன்பாலவி அவர்களைக் காண முகலாயப் பேரரசர் பர்ரஹ்ஷேர் அவர்களின் அரசைச் சேர்ந்த தலைவர்களிலொருவரான அமீர்ரோஷன் தவ்லா என்பவர் வந்திருந்தார்கள். அப்பொழுது அப்பெரியாரின் தவச்சாலையை கட்டுவதற்கு நிதியாக அவராக முன்வந்து அறுபதாயிரம் ரூபாய்களைக் கொடுத்தார். அப்பணத்தை அங்கு ஓரிடத்தில் வைத்துவிட்டுச் செல்லுமாறு அவருக்கு கூறினார்கள். அவ்வாறு அவர் வைத்துவிட்டுச் சென்றார். பின்னர் அப்பெரியார் அதனை அவ்வூரிலும், அருகிலுள்ள ஊர்களிலுமுள்ள விதவைப் பெண்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், தேவையுடைய மக்களுக்கும் கொடுத்தனுப்பினார்கள். ரூபாய் முழுவதும் முடிந்தது. அதில் எதுவும் மீதமாகவில்லை.

பின்னர் அமீர்ரோஷன் தவ்லா மறுமுறை அங்கு வந்தபொழுது, தேவையுடையோருக்கும் ஏழை எளியோருக்கும் வழங்கிப் பணிபுரிவதன் நற்கூலி, தவச்சாலையை கட்டுவதை விட மேலானது என விளக்கமளித்தார்கள்.

மற்றொரு முறை அவர்களுக்கு மூன்று லட்சம் ரூபாய்கள், பர்ரஹ்ஷேர், ரோஷன் தவ்லா, அப்துல்லாஹ்கான் ஆகியோரிடமிருந்து அன்பளிப்பாகக் கிடைத்தன. அவைகளை அருகிலுள்ள கிராமங்களிலுள்ள ஏழை எளியோர்களுக்கும், சான்றோர்களுக்கும் வழங்க உத்தர விட்டார்கள். **(அல் அர்கானுல் அர்பஆ)**

ஹிஜ்ரி 12ம் நூற்றாண்டில் நம் நந்தமிழ் நாட்டில் வாழ்ந்த வள்ளல் பெருந்தகை ஸைய்யிது அப்துல் காதிர் மரைக்காயர் என்னும் சீதக்காதி அவர்களை மக்கள் இன்றும் போற்றிப் புகழ்கின்றனர். கீர்த்திமிகு கீழக்கரை மாநகரில் பெரு வணிகராய் வாழ்ந்த அவர்கள், ஏழை மக்களுக்கு ஓயாது வழங்கி மகிழ்ந்துள்ளார்கள்.

கடந்த ஹிஜ்ரி 14ம் நூற்றாண்டில் நமது தமிழகத்தில் பெரும் வணிகர்களாகத் திகழ்ந்த M.J. ஜமால் முஹம்மது



சாஹிப், C. அப்துல் ஹக்கீம் சாஹிப் போன்றோர் மாபெரும் கொடை வள்ளல்களாகத் திகழ்ந்துள்ளனர்.

அல்லாஹ்வின் பாதையில் வாரி வழங்குவோரின் நற்கூலி பன்மடங்காகப் பெருகுகிறது.

அல்லாஹ்வின் அருள்மறை கூறுகிறது:

"அல்லாஹ்வின் பாதையில் செலவளிப்பவர்களுக்கு உதாரணமாகிறது, ஒரு தானியமணி போன்றாகும். அது ஏழு கதிர்களை முளைப்பித்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியமணிகள் இருந்தன. (இதனைப் போன்றுதான் அல்லாஹ்வின் பாதையில் செலவளிப்போருக்கு ஒன்றுக்கு ஏழுநூறாக வழங்கப்படும். அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு (மேலும்) இரட்டிப்பாக வழங்குவான். அல்லாஹ் மிக விஸ்தீரணமானவனும், மிக அறிந்தவனுமாவான்.

**(அல்குர்ஆன் 2-261)**

கொடைத்தன்மையின் மாண்புகளை பின்வரும் மாநபி மணிமொழிகள் எடுத்துரைக்கின்றன.

கொடையாளி, அல்லாஹ்வுக்கும், சுவனத்திற்கும், மக்களுக்கும் நெருங்கியவராவார். **(திர்மிதி)**

நிச்சயமாக தர்மம், இரட்சகனின் கோபத்தை அணைக்கிறது. தீய மரணத்தைவிட்டுத் தடுக்கிறது. **(திர்மிதி)**

தர்மம் செல்வத்தைக் குறைப்பதில்லை. பிறரை அவர் மன்னிப்பது கொண்டு, அல்லாஹ் அவரது கண்ணியத்தை உயர்த்தாமலே தவிர வேறில்லை. அவர் அல்லாஹ்வுக்காக பணிவது கொண்டு, அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்தியே தவிர வேறில்லை. **(முஸ்லிம்)**

ஒவ்வொரு நாள் காலையிலும் இரு வானவர்கள் இறங்குகின்றனர். ஒருவர் கூறுவார்: இறைவா! (உன் பாதையில்) செலவழிப்பவருக்கு உன் (அருட்கொடைகளிலிருந்து) பகரம் வழங்குவாயாக! மற்றொருவர் கூறுவார்: இறைவா! செலவழிக்காமல் தடுத்துக் கொள்பவருக்கு அழிவைத் தருவாயாக! **(புகாரி, முஸ்லிம்)**

தர்மத்தை விரைவு படுத்துங்கள். நிச்சயமாக சோதனை அதனைத் தாண்டாது. (ரஜீன்)

அனாதைகளிடம் அன்பு செலுத்தி அவர்களை ஆதரித்து வருவது மாபெரும் அறப்பண்பாகும்.

அல்லாஹ்வின் அருள்மறை கூறுகிறது:

அனாதைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் வினவு கின்றனர். நபியே! நீர் கூறுவாயாக! அவர்களுக்கு (அவர் களின் காரியங்களை) சீர் செய்வது நல்லதாகும். (அல்குர்ஆன் 2-220)

பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் உபகாரம் செய்யுங்கள். (அல்குர்ஆன் 4-36)

அனாதைகளின் பொறுப்பாளரும் நானும் சுவனத்தில் இவ்வாறிருப்போம் என மாநபி (ஸல்) கூறி, தங்கள் கலிமா (ஆட்காட்டி) விரலையும், நடுவிரலையும் சுட்டிக் காண் பித்தார்கள். (அவர் உயர்ந்த அந்தஸ்துகளைப் பெறுவார்.) (புகாரி)

மற்றொரு மணிமொழியில் மாநபி (ஸல்) அவர்கள், என்னை சத்தியத்தைக் கொண்டு அனுப்பிவைத்த அல்லாஹ் வின் மீது ஆணையாக! அனாதையின் மீது இரக்கம் காட்டி, அவரிடம் பேச்சை மென்மையாக்கி, அவரது பலவீனத்தின் மீது இரக்கம் காட்டி, தமக்கு அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடைகள் கொண்டு அண்டை வீட்டாரிடம் பெருமை அடிக்காதவராகவும் இருந்தவரை கியாமத் நாளில் அல்லாஹ் வேதனை செய்யமாட்டான் எனக் கூறியுள்ளார்கள். (திப்ரானி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஉமாமா (ரலி) அறிவிக்கிறார்கள்: அனாதைக் குழந்தையின் தலையில் (அன்பு, இரக்கத்தால்) அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற் காக ஒருவர் தடவுவாரானால், அவரது கரம்பட்ட ஒவ் வொரு முடிக்கும் பல நன்மைகள் உண்டு. அஹ்மது, திர்மிதி



அல்லாஹ் தன் அருள்மறையில், "அல்லாஹ்வின் மீதுள்ள அன்பால் ஏழைக்கும், அனாதைக்கும், கைதிக்கும் அவர்கள் உணவளிக்கிறார்கள்" (அல்குர்ஆன் 76-8) என சுவனம் செல்லும் நல்லோர்களான முஃமின்களை புகழ்ந்துரைக்கிறான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அலி (ரலி) கூறுகிறார்கள்: குழந்தைகள் பருவமெய்திய பின் அனாதை என்பது இல்லை. (அபூதாவூது)

அனாதைகள் எனப்படுவோர் தந்தையை இழந்த சிறுவரும், சிறுமியருமாவார். அவர்களுக்கு சொத்துக்கள் இருந்தபோதிலும் சரியே.

அவர்கள் வசதியற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கு உணவு, உடைக்கும் உதவுவதும், அவர்களது உடல் நலம் பேணுவதும், அவர்களுக்கு கல்வி மற்றும் ஒழுக்கப் பயிற்சி வழங்கி வருவதும் அவர்களுக்கு உபகாரம் செய்து வருவதைச் சேர்ந்தவைகளாகும்.

அவர்களுக்கு சொத்துக்கள் இருந்தால், அவர்களது உடல்நலம் பேணுவதும், அவர்களுக்கு கல்வி மற்றும் ஒழுக்கப் பயிற்சி வழங்கி வருவதும், அவர்களது சொத்துக் களை நன்கு அபிவிருத்தி செய்து, அவர்கள் பருவமெய்தி யதும் அவர்களிடம் ஒப்படைத்துவிடுவதும் அவர்களுக்கு உபகாரம் செய்து வருவதைச் சேர்ந்தவைகளாகும்.

அவர்களைப் பரிபாலனம் செய்யும் பொறுப்பாளர் ஏழையாக இருந்தால், தம் உழைப்புக்கு நியாயமானதோர் ஊதியத்தை அவர்களது செல்வத்திலிருந்து அவர் பெற்றுக் கொள்ளலாம். எனினும் அவர்களது பொருளை அநியாய மாக உண்ணுவது தகாது. அவ்வாறு உண்ணுவோர் நரக நெருப்பையே உண்ணுகின்றனர் என அல்லாஹ் தன் அருள் மறையில் எச்சரிக்கின்றான்.

அனாதைகளின் பொருளை அழகிய (நியாயமான) முறையிலே தவிர நெருங்காதீர்கள். (அல்குர்ஆன் 17-34)

கணவனை இழந்துவாடும் விதவைப் பெண்களின் நல்வாழ்விற்கு உதவுவோர் மாபெரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: விதவைகளுக்கும் ஏழை களுக்கும் பாடுபடுபவர், அல்லாஹ்வின் பாதையில் பாடு படுபவர் போன்றாவார். மேலும் தொடர்ந்து நின்று வணங்குபவர் போன்றாவார். மேலும் தொடர்ந்து நோன்பு நோற்பவர் போன்றாவார். (புகாரி, முஸ்லிம்)

தம் கணவன் இறந்த பிறகு சின்னஞ்சிறு குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக, அவர்கள் பெரிதாகும் வரை மறு மணம் முடிக்காமல், தம் இல்லற வாழ்வைத் தியாகம் செய்த பெண்மணி சுவனத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களைப் பெறுவார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அவ்ப் பின் மாலிக்கில் அஷ்ஜயீ (ரலி) அறிவிக்கிறார்கள்: தன் கணவனின் மரணத்திற்குப் பின் தன் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டுக் களைப்புற்றுவிட்ட பெண்மணியும், நானும் கியாமத் நாளில் இவ்வாறு இருப் போம் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டு தங்கள் நடுவிரலையும், கலிமா விரலையும் சுட்டிக் காட்டி னார்கள். (சுவனத்தில் அப்பெண்மணி உயர்ந்த அந்தஸ்துக் களைப் பெறுவார்) அப்பெண்மணி தன் குழந்தைகள் பெரி தாகும் வரை, அல்லது மரணிக்கும் வரை, தனக்கு அழகும், அந்தஸ்தும் இருந்தும் தன் குழந்தைக்காக தன்னை (மறு மணத்தை விட்டுத்) தடுத்துக்கொண்டார். (அபூதாவூது)

## மனித நேயப் பண்புகள்

நிச்சயமாக ஆதமின் மக்களை நாம் சங்கைப் படுத்தினோம். அவர்களைத் தரையிலும் கடலிலும் சுமத்தினோம். மணமான பொருள்களிலிருந்து அவர்களுக்கு



ஆகாரத்தை வழங்கினோம். நாம் படைத்துள்ள (படைப்பு கள்) பலவற்றைப் பார்க்கிலும் அவர்களை மேன்மைப் படுத்தினோம். (அல்குர்ஆன் 17-70)

மனிதர்களே! நிச்சயமாக உங்களை நாம் ஓர் ஆணிலி ருந்தும் (ஆதமிலிருந்தும்) ஒரு பெண்ணிலிருந்தும் (ஹவ்வா விலிருந்தும்) படைத்தோம். (அல்குர்ஆன் 49-13)

மனிதர்களே! உங்களது இரட்சகனை பயந்து கொள்வீர் களாக! அவன் உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத் தான். பின்னர் அதன் ஜோடியை அதில் நின்றும் படைத் தான். அதன்பின் அவ்விருவரிலிருந்து அதிகமான ஆண் களையும் பெண்களையும் (உலகில்) பரத்தினான். (அல்குர்ஆன் 4-1)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அவர்களும், அப்துல்லாஹ் (ரலி) அவர்களும் அறிவிக்கிறார்கள்: படைப்புகள் அல்லாஹ்வின் குடும்பத் தினராவர். (அல்லாஹ்வால் பரிபாலிக்கப்படுபவர்கள்) அப்படைப்புகளில் அல்லாஹ்வுக்கு அதிக உவப்பானவர். அல்லாஹ்வின் குடும்பத்தினரின் பால் அதிக உபகாரம் செய்பவராக இருப்பவராவார். (பைஹகீ)

நபியவர்கள் நவின்றதாக ஜரீர்பின் அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்கள்: மனிதர்கள் மீது இரக்கம் காட்டாத வர்கள் மீது அல்லாஹ் இரக்கம் காட்டமாட்டான். (புகாரி, முஸ்லிம்)

மக்களிடம் நற்குணம் கொண்டு பழகுவீராக! என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (அஹ்மது, திர்மிதி)

மஆது (ரலி) கூறுகிறார்கள்: நான் எமன் நாடு செல்லும் பொழுது நபியவர்கள் எனக்குச் செய்த உபதேசத்தில் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் "மக்களுக்கு உம் குணத்தை அழகாக்கிக் கொள்வீராக!" என்பதாகும். (மாலிக்)

நபியவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு முஃமின் தன் நற்குணத்தால், இரவில் நின்று வணங்குபவரின் நன்மையையும், பகலில் நோன்பு நோற்பவரின் நன்மையையும் பெறுவார். (அபூதாவூது)

மனிதனுக்கு கொடுக்கப்பட்டவைகளில் மேலானவை எது? என அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வினவப் பட்டது அதற்கவர்கள், 'நற்குணம்' என விடை பகர்ந்தார்கள். (பைஹகீ)

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கிறார்கள்: உங்களில் மிக அழகான குணமுள்ள வர்கள் எனக்கு மிக உவப்பானவர்களில் நின்றுமுள்ள வர்களாவர். (புகாரி)

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: உங்களில் சிறந்தவர் நீண்ட ஆயுளும் அழகிய குணமும் உடையவராவார். (அஹ்மத்)

முஃமின்களில் ஈமான் பரிபூரணமானவர் அவர்களில் மிக அழகிய குணமுள்ளவராவார். (அபூதாவூது, தாரமி)

மக்களுக்கு அழகிய சொல்லாகச் சொல்வீராக! என அல்லாஹ் தன் அருள்மறையில் குறிப்பிடுகிறான்.

(அல்குர்ஆன் 2-83)

மனிதர்கள் அனைவரும் ஆதம், ஹவ்வாவின் புதல்வர் களாகவும், அல்லாஹ்வின் படைப்புகளில் மேலானவர் களாகவும் உள்ளார்கள்.

அறிவு, பேச்சு, சீரான வடிவமைப்பு, மற்ற படைப்பினங் களை அடக்கியாளும் ஆற்றல் போன்ற பல்வேறு சிறப்புப் பண்புகளை வழங்கி அல்லாஹ் மனிதர்களை மேன்மைப் படுத்தியுள்ளான். தானியங்கள், காய்கறிகள், பழங்கள், மாமிசம் போன்ற எண்ணற்ற உணவுப் பொருள்களை அவர் களுக்கு இரணமாக வழங்கியுள்ள அல்லாஹ், அவைகளைப் பக்குவமாகவும், பரிபூரணமாக சமைத்தும் சுவையாக



உண்ணும் சிறப்புத் தன்மையை அவர்களுக்கு வழங்கினான். மற்ற படைப்புகள் அவ்வாறல்ல.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதர்களுக்கு நேர்வழி காட்டி நல்வழியில் அழைத்துச் செல்லும் தன் திருத்தூதர் களையும், அவர்களுடன் தன் திருவேதங்களையும் வழங்கினான்.

படைப்புகளில் மேலானவனாகத் திகழும் மனிதன், மனிதப் பண்பாடுகளில் மேலோங்கி வாழவேண்டுமென இஸ்லாம் விரும்புகிறது. அவனிடம் அன்பு, பரிவு, இரக்கம், வாய்மை, நேர்மை, நீதி, பிறர் நலம் பேணல் தாராளத் தன்மை, சௌஜன்யம், சகிப்புத்தன்மை, ஒருவரையொருவர் மதிக்கும் மனப்பாங்கு போன்ற மேலான பண்புகள் மிளிர்ந்து வரவேண்டுமென அது விரும்புகிறது.

பசி பட்டினியில் வாடுகின்ற மக்கள், ஆடையில்லாத மக்கள், உடல் நலிவடைந்தவர்கள், அநீதி இழைக்கப் பட்டவர்கள், ஆபத்துகள், விபத்துகளால் பாதிக்கப்பட்ட வர்கள், மனிதர்கள் என்ற அடிப்படையில் சமய, இன, மொழி வேறுபாடுகளன்றி அவர்களது பிணி துடைக்கப்பட வேண்டுமென இஸ்லாம் விரும்புகிறது. அதனால்தான் ஜகாத்தை தவிர உள்ள ஏனைய தர்மங்களை முஸ்லிம் அல்லாதோருக்கும் வழங்கலாம் என அது அனுமதித் துள்ளது.

நோயாளிகளைக் கண்டு உடல் நலம் வினவுவது, அண்டை வீட்டாரின் மாண்புகளைப் பேணுவது போன்ற மனிதநேயப் பண்புகளை அனைவருடனும் மேற்கொண்டு வர அது நல்வழி காட்டியுள்ளது.

அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு யஹூதிச் சிறுவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்ப வராக இருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவரிடம் சென்று அவரின் உடல் நலத்தை விசாரித்தார்கள். (புகாரி)

ஒருமுறை அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அவர்கள் முன்னிலையில் அவர்களது பணியாளர், அவர்களது ஆட்டை அறுத்து, தோலை உறித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்களது பணியாளரிடம் தோலை உறித்து முடிந்தால், (இறைச்சி பங்கிடுவதை) நமது அண்டை வீட்டுக்காரரான யஹூதியிலிருந்து ஆரம்பிப்பீராக! எனக் கூறினார்கள். அப்பொழுது அங்கிருந்த ஒருவர், யஹூதிக்கா என வினவினார். அதற்கு அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அவர்கள், அண்டை வீட்டாருக்கு வாரிசுரிமை வழங்கி விடுவார்களோ என நாங்கள் அஞ்சும் அளவிற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு அண்டை வீட்டாருக்கு நன்மை செய்ததை உபதேசித்துள்ளார்கள் எனக் கூறினார்கள். (அதபுல் முப்ரது, அபூதாவூது)

ஒரு முஸ்லிம் பிற சமய அன்பர்களுடன் நற்பண்பு களுடனும் அழகிய முறையிலும் பழகிவருதல் வேண்டும். அவரது அன்பு, பரிவு, இரக்கம், பிறர் நலம் பேணல் போன்ற மனித நேயப் பண்புகள் மக்களது இதயங்களை ஈர்ப்பதாக அமைய வேண்டும்.

இஸ்லாத்தின் கொள்கைகளையும், நற்பண்புகளையும் மக்களுக்கு நன்கு எடுத்துக்காட்ட வேண்டும். அவர்களது சந்தேகங்களுக்கு சரியான விளக்கமளித்து அவைகளைப் போக்க முயலவேண்டும். அப்பொழுது பரஸ்பர அன்பும், நல்லெண்ணமும் பெருகும்.

கொடுக்கல் வாங்கல் செய்யும்பொழுது எல்லா மக்களிடத்திலும் உண்மை, வாக்குறுதி காத்தல்; நம்பிக்கை, நீதம் செய்தல் போன்ற பண்புகளைப் பேணி வரவேண்டும். பொய், புரட்டு, மோசடி, ஏமாற்றுதல், வட்டிக்கு கொடுக் கல், வாங்கல்கள் போன்றவை ஒரு முஸ்லிமின் பண்பல்ல. அவைகளை எப்பொழுதும், யாரிடத்திலும் இருத்தல் கூடாது.

மக்களின் உரிமைகளை வழங்குவதை இஸ்லாம் வலி



யுறுத்துகிறது. யாருடைய உரிமையையும் தடுத்துக்கொள் வதையோ, பறித்துக் கொள்வதையோ இஸ்லாம் விரும்புவ தில்லை. "மக்கள் தங்கள், உயிர், உடமைகள் விஷயத்தில் யாரை அச்சம் தீர்ந்துவிட்டனரோ அவரே பரிபூரண முஃமினாவார்" என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (இப்னுமாஜா)

மக்களின் தவறுகளை மன்னிக்கும் தாராள உள்ளத் துடன் பழகி வரவேண்டும். அல்லாஹ் தன் அருள்மறையில் "மன்னிப்பை கையாளுவீராக! நன்மையை எடுத்தோது வீராக! அறிவீனர்களைப் புறக்கணிப்பீர்களாக! எனக் கூறுகிறான். (அல்குர்ஆன் 7-199)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) கூறுகிறார்கள்: நபி மூஸா (அலை) அவர் கள் ஒருமுறை அல்லாஹுதஆலாவிடம் "உன் அடியார் களில் உன்னிடம் மிகக் கண்ணியமானவர் யார் என வினவினார்கள். அதற்கு அல்லாஹ், ஆற்றல் பெற்றிருந்தும் மன்னித்து விடுகிறாரே அவராவார் எனப் பகர்ந்தான். (பைஹகீ)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலை, அவர்களுக்கு தொல்லைகளையும், இடையூறு களையும் பலர் அளித்துக் கொண்டிருந்தபொழுதும், எல்லா மக்களுடனும் நன்முறையிலேயே பழகி வந்தார்கள். பின்னர் அவர்கள் மதீனா வந்த பிறகும் யஹூதிகளிடம் நன்முறை யிலேயே பழகி வந்தார்கள். அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அவர்களின் விருந்தழைப்புகளை ஏற்றார்கள். அவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை அழகிய முறையில் மேற்கொண்டார்கள். தங்களுக்கிடை யேயான பல பிரச்சினைகளில் யஹூதிகள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நீதி பெற்றுச் சென்றார்கள். "நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கிறீர்! என அல்லாஹ் தன் அருள்மறையில் நபியவர் களைப் புகழ்ந்துரைக்கிறான். (அல்குர்ஆன் 68-4)

இஸ்லாம் வழங்கும் உயர்ந்த பண்பாடுகளையும், அழகிய நற்குணங்களையும் மக்கள் அனைவரும் கடைப்பிடித்து, நானிலம் போற்றும் நன்மக்களாக, நற்கூலிகள் அதிகம் பெறுவோராக நாம் திகழ அல்லாஹ் அருள்புரிவானாக!

## தமக்குத்தாம் ஆற்ற வேண்டிய கடமைகள்

ஒருவர் தமக்குத்தாம் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. அவைகளை இஸ்லாம் அழகுற எடுத்தியம்புகிறது.

அல்லாஹ்வுக்கும், அவனது அடியார்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்துவரும் அதே வேளை, தமக்குத்தாம் ஆற்றவேண்டிய கடமைகளையும் சீரும் சிறப்போடும் ஆற்றி, நலமும், பலமும், பரிசுத்தமும், உற்சாகமுமிக்க முஃமினாக அவர் திகழுவது அவசியமாகும்.

சுவர் இருந்தால்தானே சித்திரம் என்ற முதுமொழிக் கொப்ப அவர் வலிவும் பொலிவும் பெற்று விளங்கும் பொழுதுதான் மற்றவர்களுக்கு அவர் செய்ய வேண்டிய கடமைகளை அழகுற ஆற்ற முடியும்.

அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "அப்துல்லாஹ்வே! நீர் (தொடர்ந்து) பகலில் நோன்பு நோற்பதாகவும், இரவில் நின்று வணங்குவதாகவும் கேள்விப்படுகிறேனே? என என்னிடம் வினவினார்கள். ஆம், அல்லாஹ்வின் திருத் தூதரே! என நான் மறுமொழி பகர்ந்தேன். அதற்கவர்கள் அவ்வாறு செய்யாதீர்! நோன்பு நோற்பீராக! (சில தினங்கள்) விட்டுவிடுவீராக! நின்று வணங்குவீராக! (சிறிது நேரம்) உறங்குவீராக! ஏனெனில் உம் உடலிற்கு உம்மிடம் சில உரிமைகள் உள்ளன. உம் இரு கண்களுக்கு உம்மிடம் சில உரிமைகள் உள்ளன. உம் மனைவிக்கு உம்மிடம் சில உரிமைகள் உள்ளன. உம்மைச் சந்திப்பவர்களுக்கு உம்மிடம் சில உரிமைகள் உள்ளன எனப் பகர்ந்தார்கள்.

(புகாரி, முஸ்லிம்)



மற்றொரு அறிவிப்பில், நபியவர்கள் அவருக்கு மேலும் கூறினார்கள்: நீர் அவ்வாறு செய்தால் உம் கண்களின் பார்வை பலவீனமாகும். உம் உடல் சடைவடைந்துவிடும். (புகாரி)

உத்மான் பின் மள்வூன் (ரலி) அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உத்மானே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! நிச்சயமாக உன்னிடம் உம் குடும்பத்தினருக்கு சில உரிமைகள் உள்ளன. உன்னிடம் விருந்தினர்களுக்கு சில உரிமைகள் உள்ளன. உன்னிடம் உன் உடலிற்கு சில உரிமைகள் உள்ளன. நோன்பு நோற்பீராக! விட்டு விடுவீராக! தொழுவீராக! உறங்குவீராக! எனப் பகர்ந்தார்கள். (அபூதாவூது)

உங்களில் ஒருவர் அவரது உற்சாகத்தில் (நபிலான) தொழுகையை தொழட்டும்! அவர் சடைவடைந்தால் அமர்ந்து கொள்ளட்டும்! என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி)

அடியான் தன் இரட்சகனின் மன்னிப்பை விரும்புவது போல அல்லாஹ் தன் சலுகையை அடியான் ஏற்பதைப் பிரியப்படுகிறான் என மாநபி (ஸல்) அவர்கள் மற்றொரு மணிமொழியில் கூறியுள்ளார்கள். (திப்ரானி)

ஒருமுறை இரவு முழுவதும் உறங்காது நபில் தொழும் பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியின் தொழுகை குறித்து நபியவர்களின் சமுகத்தில் எடுத்துரைக் கப்பட்டது. அதற்கு நபியவர்கள், தடுத்துக்கொள்வீர்களாக! நீங்கள் சக்திபெறும் அளவைக் கொண்டு அமல்களைப் பற்றிப் பிடித்துக்கொள்வீர்களாக! நீங்கள் சடைவடையும் வரை அல்லாஹ் சடைவடையமாட்டான். (உங்களுக்கு நற்கூலி வழங்க அல்லாஹ் சடைவடைய மாட்டான்.)

(புகாரி)

ஒருமுறை அப்துல்லாஹ் எனும் தோழருக்கு நபியவர்கள் கூறினார்கள்: அப்துல்லாஹ்வே! இரவு முழுவதும் (சில

காலம்) நின்று வணங்கிவிட்டு பின்னர் அதனை அறவே விட்டுவிட்டாரே அவர் போல் நீர் ஆகவேண்டாம்! எனப் பகர்ந்தார்கள். (புகாரி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நிச்சயமாக அமல்களில் அல்லாஹ்வுக்கு மிக் உவப்பானது, அவைகளில் நேமமாக தொடர்ந்து செய்யப்பட்டு வரும் அமலாகும். அது குறைந்த அளவானாலும் சரியே. (அபூதாவூது)

ஆர்வ மிகுதியால் நபிலான அமல்களில் அதிகமதிகம் ஈடுபட்டுவிட்டுப் பின்னர் சடைவடைந்து அவைகளை அறவே விட்டுவிடுவதை விட குறைந்த அளவேயாயினும் அவைகளைத் தொடர்ந்து பேணிவருவது நலமாகும் என்பதை மேற்காணும் நபிமொழிகள் உணர்த்துகின்றன.

முஜீபத்துல் பாஹிலிய்யா என்பவர் அறிவிக்கிறார்கள்: பாஹிலி என்பவர் தம் ஊரிலிருந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமுகம் வந்து சென்றார். பிறகு ஓராண்டு கழித்து மறுமுறை அவர்கள் சமுகம் வந்தார். அப்பொழுது அவரது நிலையும் தோற்றமும் மாறியிருந்தது.

அப்பொழுது அவர் அல்லாஹ்வின் திருத்தூதரே! தாங்கள் என்னைத் தெரிகிறீர்களா! என வினவினார். அதற்கு நபியவர்கள் நீர் யார்? என வினவினார்கள். அதற்கவர், சென்ற ஆண்டு தங்கள் சமுகம் வந்து சென்ற பாஹிலி ஆவேன் நான் எனக் கூறினார். அதற்கு நபியவர்கள், நீர் அழகிய தோற்றமுடையவராக இருந்தீரே! எவை உம்மை இவ்வாறு மாற்றின என வினவினார்கள். அதற்கவர், நான் தங்கள் சமுகம் வந்து சென்றதிலிருந்து இரவில் தவிர உண்ணுவதில்லை. (பகல் காலமெல்லாம் நோன்பு நோற்றுக் கொண்டிருந்தேன்) என்றார். அதற்கு நபியவர்கள், நீர் உம் ஆன்மாவை வேதனைப்படுத்தி விட்டீர் எனப் பகர்ந்தார்கள்.

பின்னர் அவரிடம் பொறுமையின் மாதத்திலும்



(ரமலானிலும்) ஒவ்வொரு மாதத்தில் ஒரு நாளும் நோன்பு நோற்பீராக! எனப் பகர்ந்தார்கள். அதற்கவர் மேலும் அதிகப்படுத்துவீர்களாக! எனக்கு சக்தியுள்ளது என்றார். அப்பொழுது மாதத்தில் இரு நோன்புகள் நோற்பீராக! என்றார்கள். அதற்கவர் மேலும் அதிகப்படுத்துவீர்களாக! எனக் கூறியபொழுது, மாதத்தில் மூன்று நோன்புகள் நோற்பீராக! எனக் கூறினார்கள். மேலும் அதிகப்படுத்துவீர்களாக! என அவர் மீண்டும் கூறியபொழுது, சங்கைமிகு (ரஜப், துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய) மாதங்களில் (அதிகம்) நோன்பு நோற்பீராக, பின்னர் விட்டுவிடுவீராக! என மும்முறை கூறிவிட்டு தங்கள் மூன்று விரல்களை ஒன்றிணைத்து பின்னர் விரித்தார்கள். (சங்கைமிகு அம்மாதங்களில் மூன்று தினங்கள் நோன்பு நோற்பதுமாக பின்னர் ஓரிரு தினங்கள் விட்டுவிடுவதுமாக அதிகம் நோற்பாயாக என சமிக்ஞை செய்தார்கள்.) (அபூதாவூது)

நபித்தோழர் அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அதிக நோன்புகளை தொடர்ந்து வைக்க ஆர்வப்பட்டபொழுது நபியவர்கள் அவருக்கு கூறினார்கள்: ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நோன்புகள் நோற்பீராக! அது கால மெல்லாம் நோன்பு நோற்பது போன்றாகும். அதற்கவர் நான் அவைகளை விடவும் அதிகம் நோன்பு நோற்க ஆற்றல் பெற்றவனாக உள்ளேன் எனக் கூறினார். அப்படியானால் ஒரு நாள் நோன்பு நோற்று இரண்டு நாள்கள் விட்டு விடுவீராக! என்றார்கள். நான் அவைகளை விடவும் ஆற்றல் பெற்றவனாக உள்ளேன் என அவர் மேலும் கூறியபொழுது, ஒருநாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பீராக! அது நடுநிலையான நோன்பாகும். மேலும் நபி தாவூது (அலை) அவர்களது நோன்புமாகும் என்றார்கள். அதற்கவர் நான் அதனைவிடவும் ஆற்றல் பெற்றவனாக உள்ளேன் என மீண்டும் கூறியபொழுது, அதனைவிட மேலான நோன்பு கிடையாது எனப் பகர்ந்தார்கள். (அபூதாவூது)

நபிலான அமல்கள் அதிகம் செய்வதில் நாயகத் தோழர்கள் காட்டிய பேரார்வத்திற்கு இந்நபிமொழிகள் சான்றாகத் திகழ்கின்றன.

நபிலான உபரி வணக்கங்களில் ஆர்வம் அதிகமிருக்கிற அதேவேளை, தன் உடலிற்கு ஓய்வு வழங்கவும், அதன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், அதனைத் தூய்மைப்படுத்தி அலங்கரித்துக்கொள்ளவும், அதன் நலன் களைப் பேணி வரவும், அதில் அமையப்பெற்றுள்ள முக்கிய உறுப்பும் அல்லாஹ்வின் மாபெரும் அருட்கொடையுமான கண்களைக் காத்துவரவும், தன் சிந்தனைக்கும், யோசனைக் கும், மனதுடனான கணக்கீட்டுக்கும் நேரம் ஒதுக்கீடு செய்யவும், தான் பிறருக்குச் செய்ய வேண்டிய கடமை களைச்செவ்வனே செய்து வரவும், ஒரு முஃமின் கடமைப் பட்டுள்ளார் என்பதை மேற்காணும் நபிமொழிகள் எடுத்துணர்த்துகின்றன.

அல்லாஹ்வுக்கும், அவன் அடியார்களுக்கும், தனக்கும் ஆற்றவேண்டிய கடமைகளை நிறைவாக இனிதே நிறைவேற்றி, அல்லாஹ்வின் அளப்பரிய அருள்களையும், அவன் அடியார்களின் அன்புமிகு பிரார்த்தனைகளையும் என்றும் பெற்று, நம் இம்மை, மறுமை வாழ்வுகள் சிறப்பும் செழிப்புமாக விளங்க அல்லாஹ் நல்லுதவி நல்குவானாக! ஆமீன்.

*வஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி*
*ரப்பில் ஆலமீன்*